Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Fihest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 11 (28.08.2004) சனிக்கிழமை இதழ்:330

## கனடிய சமஷ்டி அமைப்புத் தலைவர் தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு!



(கிளிநொச்சி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து கனடிய சமஷ்டி அமைப்பின் தலைவரும் முன்னாள் ஒன்ராரியோ மாகாண முதல்வருமான பொப்ரே நேற்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து விரிவாக ஆராய்ந்தார்.

கனடிய அரசியல் விஞ்ஞானபீட போதனாசிரியர் கலாநிதி டேவிட் கமரூனும் இந்தச் சந்திப்பில் பொப்ரேயுடன் கலந்துகொண்டார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படுவதன் அவசியம் குறித்து பொப்ரே விரிவாக விளக்கமளித்ததாகவும் இரு தரப்பினரிடையேயான பேச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் பாதுகாப்பை பொலிஸார் குறைப்பு!

### அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை பணிப்பு

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பை பொலிஸார் திடீரெனக் குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் மிக முக்கிய தலைமைப் பொறுப்பிலுள்ள பிரதமரின் பாதுகாப்பை எவ்வித முன்னறிவிப்புமின்றி பொலிஸார் குறைத்துள்ளமை குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவுக்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெறும்போது பொலிஸார் தொழிற்சங்கவாதிகள் மீது மேற்கொள்ளும் வன்முறைகள் குறித்தும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதோடு, இது குறித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரப்பட்டுள்ளது. (01)

### கருணாவுக்கு பாதுகாப்பு வழங்கி சர்ச்சைக்குள்ளான

# ராணுவ புலனாய்வு பணிப்பாளருக்கு பதவி உயர்வு வழங்கிக் கௌரவிப்பு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்குப் பாதுகாப்பளித்து கொழும்புக்குக் கொண்டு சென்றது தொடர்பான சர்ச்சைகளில் சிக்கியிருந்த – இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர்

## பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்ட இளைஞன் நேற்று மரணம்!

## பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்ட இளைஞன் நேற்று மரணம்!

(இளவாளை)

வர்த்தக நிலையம் ஒன்றினுள், நள்ளிரவு உறக்கத்தில் இருந்த வேளை - விசமிகளால் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டதில் உடல் முழுவதும் காயமுற்ற இளைஞன் நான்கு தினங்களின் பின்னர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இளவாலை கல்லூரி வீதியைச் சேர்ந்த ஜெயானந்தன் ரஜீவ் (வயது - 29) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் பண்டத்தரிப்பு இளந்தென்றல் வர்த்தகநிலையத்தின் உரிமையாளர் ஆவார்.

கடந்த 24 ஆம் திகதி நள்ளிரவு மேற்படி வர்த்தக நிலையத்தின் உள்ளே விசமிகளால் பெற்றோல் ஊற்றித் தீ வைத்தவேளை - உறக்கத்திலிருந்த மேற்படி இளைஞரே எரிகாயமடைந்தவராவார்.

உடல் முழுவதும் எரிகாயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நான்கு தினங்களாக சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தார்.

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்குப் பாதுகாப்பளித்து கொழும்புக்குக் கொண்டு சென்றது தொடர்பான சர்ச்சைகளில் சிக்கியிருந்த – இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் கபில ஜெயந்தவிதாரண மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்படவுள்ளார்.**

**இது குறித்து இராணுவப் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில் –**

இராணுவப் புலனாய்வுப் பணியகப் பணிப்பாளரான (DMI) பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இராணுவப் புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் நாயகமாக (DGMI) இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரண விரைவில் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்படவுள்ளார் எனத் தெரிவித்தார்.

சில வாரங்களுக்கு முன்னர் பிரிகேடியர் கபில் ஹெந்தவிதாரண தான் பதவி விலகப்போவதாக இராணுவத் தளபதிக்கு அறிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு உதவியதான விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாலேயே இவர் பதவி விலகப்போவதாக செய்திகள் வெளியானபோதும் -

பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்பட்டதே தனது பதவி விலகலுக்குக் காரணமென்று பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரண குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரணவுக்கு இராணுவத் தளபதி புதிய பதவியையும் பதவி உயர்வையும் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டமை குறித்த நியமனக் கடிதத்தை இவர் பொறுப்பேற்றதாகவும் தெரியவருகிறது.

அண்மைக் காலத்தில் - கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்தது மற்றும் கிழக்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தொடர்புகள் இருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

## நோர்வே சமாதான ஏற்பாட்டாளருடன் மிலிந்த மொறகொட இரகசியப் பேச்சு!

(கொழும்பு)




ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மிலிந்த மொறகொட, நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தவார முற்பகுதியில் நோர்வே பிரதிநிதிகளுக்கும் மிலிந்த மொறகொடவுக்கும் இடையிலான பேச்சுக்கள், நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே வெளிவிவகார அமைசசின் விசேட அழைப்பின் பேரில் நோர்வேக்கு விஜயம்செய்த மிலிந்த மொறகொட, அங்கு நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரியவருகிறது.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளமை குறித்து மிலிந்த மொறகொட நோர்வே பிரதி நிதிகளுக்கு எடுத்துவிளக்கியதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரீனா றொக்கா ஆகியோருடன் உள்ள நெருக்கமான தொடர்புகளைப் பயன்படுத்தி, (12 ஆம் பக்கம் பார்க்க)



நல்லைக் கந்தன் ஏழாம் நாள் உற்சவ திருவீதியுலாக் காட்சி.


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# கடல் தொழில்நுட்ப பயிற்சி செப்ரெம்பர் 1 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்றொழில், கடலோட்டு இயந்திரவியல் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கான கடற்றொழில் தொழில்நுட்ப பயிற்சிநெறி செப்ரெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மூன்று மாதங்கள் நடைபெறவிருக்கின்ற இந்தப் பயிற்சி நெறியில் 30 பெண்கள் பங்கு பற்றவிருக்கின்றனர்.

பயிற்சியின்போது இவர்களுக்கு வலை பின்னுதல், வலை பழுதுபார்த்தல், கொறுலோன் - ஞ்நலோன், கம்பன் குத்துதல், மீன் இறால் மற்றும் கடலுணவுகள் பதனிடுதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

ஜி.ரி.இசற் அனுசரணையுடன் நடைபெறும் இந்தப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றும் பெண்களுக்கு பயிற்சி நாட்களில் நாளொன்றுக்கு ரூபா 100/- ஊக்குவிப்புப்படி வழங்கப்படவிருக்கிறது.

பயிற்சியை முடித்துக் கொண்ட பெண்கள் தனியாக அல்லது கூட்டமாக இந்த முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் தங்கள் குடும்பத்தை நடத்தக்கூடிய வருமானம் பெறமுடியுமென யாழ்ப்பாணம் கடற்றொழில் கடலோட்டு இயந்திரவியல் பயிற்சிக் கல்லூரி அதிபர் தி. இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார் (21)



நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், மீனா, சுவாதி நடிப்பில்
அன்பு சகோதரன்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
காட்சி நேரம்: 11.00.2.45.6.00 (பு.நே.)
Strike Force
(சி-2723)


நாகம்ஸ்
பிரசாந், மீனா, சுஹாசினி நடித்த
ஷாக்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


## கலாவதி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கலாவதி நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர

முக்கிய அறிவித்தல்
காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது
10.00, 2.00, 6.00, 9.00 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-2725)


## தேசிய கல்வியியற் கல்லூரி சங்கீதத்துறை ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சங்கீதத்துறையைச் சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களையும் உள்ளகப்பயிற்சியில் ஈடுபட்டுள்ள சங்கீத ஆசிரியர்களையும் நாளை காலை 8 மணிக்கு கல்லூரியின் சங்கீதத்துறை ஆசிரிய கல்வியியலாளர் திருமதி. வி.நரேந்திராவை கல்லூரியில் சந்திக்குமாறு கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்தார்.


20 % விசேட கழிவு
யாழ்.வர்த்தகக் கண்காட்சி
27.08.2004 - 29.08.2004
விரையுங்கள் எமது காட்சியறைக்கு
யசோ ஆட்கிரபிக்ஸ்

வேகத்துக்கும், சிக்கனத்துக்கும், நீடித்த பாவனைக்கும், மீனவர்களுக்கு உதவும் உற்ற நண்பர்கள்
SUZUKI OUTBOARDS
SUZUKI MOTOR CORPORATION
300 Takatsuka, Hamamatsu, Japan
TOHATSU outboards
வெளி இணைப்பு இயந்திரங்கள்
(27, 28, 29)ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் அறை இல. 38 இல் எங்களைச் சந்திக்கவும்.
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்-
நியு லங்கா றேடர்ஸ் (Pvt) Ltd
Tel & Fax - 021 - 222 2062,
Tel - 021 - 222 2838
222, 226. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/3009)


# பணிநிலை வேண்டுகை

## ஆயப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன

| | பணிநிலை | தகைமை | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|
| 01 | கணக்கு எழுதுநர் | க.பொ.த. உயர்தரத்தில் வணிகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் | $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$ |
| 02 | விலை மதிப்பீட்டாளர் (புடைவை. இலத்திரனியல். ஊர்தி உதிரிகள்) ஒப்பந்த அடிப்படையில் | i) ஆண்டு 08<br>ii) குறிப்பிட்ட துறையில் 05 ஆண்டுகள் பட்டறிவு | நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் |
| 03 | ஆய அலுவலர் (ஆண்கள்) | க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | $\frac{3630 - 4730}{10 \times 110} + 2000$ |
| 04 | ஆய உதவியாளர் (ஆண்கள்) | க.பொ.த சாதாரண தரத்தில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | $\frac{3080 - 4180}{10 \times 110} + 2000$ |
| 05 | அலுவலக உதவியாளர் | ஆண்டு 08 | நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் |
| 06 | சமையலாளர் | குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும் | $\frac{4210 - 5410}{10 \times 120} + 2000$ |
| 07 | சமையல் உதவியாளர் | குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும் | $\frac{2830 - 3930}{10 \times 110} + 2000$ |

தகுதியுடையவர்கள் 2004.09.07 ஆம் நாள் காலை 10.00 மணிக்குத் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப் பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

2004.08.26

மனிதவள மேலாளர்,
ஆயப்பகுதி, நிதித்துறை

(C/2807)

# இணையத்தொடர்பு துண்டிப்புக்கு இந்தியக் கப்பல் காரணமல்ல!

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிகொம் இணையச் சேவை பாதிக்கப்பட்டதற்கு இந்தியக் கப்பல் காரணமாக இருக்கவில்லை என்று விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கைக்கான இணையத் தொடர்பு மற்றும் 35 நாடுகளுடனான தொலைத் தொடர்புக்கான கடல்க்கீழ் தொடுகம்பியை அறுத்த இந்தியக் கப்பல் நிறுவனத்திற்கு ஐந்து மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்கவேண்டும் என்று சிறிலங்கா ரெலிக்கொம் வழங்குத் தொடுத்திருந்தது.

இந்தியாவின் ஸ்ரேட் ஒப் நாகலாந்து என்ற கப்பல் இந்தக் கடல்க்கீழ் தொடுகம்பியை மோதி அறுத்தது என்றும் இதனால், இலங்கைக்கான இணையத்தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது என்றும் ரெலிகொம் குற்றம் சுமத்தியிருந்தது.

எட்டு இலட்சம் பாவனையாளர்கள் இதனால், பாதிக்கப்பட்டனர் என்றும் தமக்கு ஐந்து மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், சிறிலங்கா ரெலிக்கொம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

எனினும், நேரில் சென்று சம்பவம் நடைபெற்ற பகுதியை இரு சாராரின் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆராய்ந்தபோது, கடலின் கீழுள்ள தொடுகம்பி அறுந்ததாக நம்பப்படும் நேரத்தில், குறிப்பிட்ட இந்தியக் கப்பல் ஒன்பது கடற்கோள் மைல்கள் தொலைவிலேயே பயணித்துக்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து வழக்கை மீண்டும் வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாக, ரெலிக்கோம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தியக் கப்பலான ஸ்ரேட் ஒப் நாகலாந்து என்ற கப்பல் நிறுவனத்தின் சார்பில், கொழும்பில் இயங்கும் முருகேசு - நீலகண்டன் சட்டத்தரணிகள் ஆஜரானார்கள்.

தமது நிறுவனத்தின்மேல் பதியப்பட்ட வழக்கின் காரணமாக ஏற்பட்ட தாமதம், இழப்புக்கள், கப்பலின் பெயருக்கு ஏற்பட்ட களங்கம் குறித்து தமது தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள் என்பது குறித்துக் கருத்துக்கூற இவர்கள் மறுத்துவிட்டார்கள்.

## சமையல் எரிவாயு விலை உயரும்

சமையல் எரிவாயுவின் விலை சுமார் 100 ரூபாவால் உயர்த்தப்படவுள்ளதாக, ஷெல் நிறுவனத்தின் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விலை உயர்வு தொடர்பாக தாம் நுகர்வோர் விவகார அமைச்சிடம் மனுத் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்சமயம் சிலிண்டர் ஒன்று 690 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு நகரில் கைக்குண்டுடன் இளைஞர் கைது

மட்டக்களப்பு நகரில் நேற்றுமுன்தினம் மாலை ஆறு மணியளவில் இளைஞர் ஒருவர் கைக்குண்டுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். மட்டக்களப்பு கடுக்காமுனையைச் சேர்ந்த யோகன் என்பவரே,· கைக்குண்டு வைத்திருந திருந்தார் எனத் தெரிவித்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்படுவார்.

கைது செய்யப்பட்ட யோகன் முன்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் சேர்ந்து இயங்கிய நிதி என்பவரது சகோதரன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹெல உறுமயவின்

# நாடாளுமன்ற குழுத் தலைவரை மாற்றுவதற்குத் திட்டம்!

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் மாற்றம் இடம்பெறவுள்ளதாக தெரியவருகிறது.

ஜாதிக ஹெல உறுமயவின் தற்போதைய தலைவராக வண.அத்துரலிய ரத்தின தேரர் பதவிவகித்து வருகிறார்.

இவர் அண்மையில் மேற்கொண்ட சில முடிவுகளால் கட்சியின் உயர்பீட பௌத்த சங்கத்தினர் சிலர் விசனமடைந்துள்ள நிலையிலேயே, நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவியில் மாற்றம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய நாடாளுமன்றக் குழுத் தலைவராக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண. எல்லாவெல மேதானந்த தேரர் நியமிக்கப்படக்கூடும் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## போலி ஆவணங்கள் பயன்படுத்தி

# அடையாள அட்டை பெற முயன்ற தமிழ் யுவதி கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை சமர்ப்பித்து தேசிய அடையாள அட்டை பெற முயன்றதாக குற்றச்சாட்டில் தமிழ் யுவதியொருவரை பொலிஸார் கொழும்பில் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட, கருணா குழுவைச் சேர்ந்த 19 வயதான ரட்ணம் சிவமாச்சி என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

சவுதி அரேபியாவுக்கு செல்வதற்காக கடவுச் சீட்டைப் பெறுவதற்கு, போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்து இவர் அடையாள அட்டையைப் பெறமுயன்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் போலி ஆவணங்களைப் பெறுவதற்காக 3,000 ரூபாவை லஞ்சமாக வழங்கியதையும், இந்தப் பெண் பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# படையினரின் பயிற்சிகள் வவுனியாவில் தீவிரம்

வவுனியாவில் படையினரின் பயிற்சி நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம்காலை ஆறு மணியளவில் ஈரப்பெரியகுளம் படை முகாமில் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து தொடர் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று வவுனியாவின் ஓமந்தை, நொச்சிக்குளம், கணேசபுரம், பிரமணாளங்குளம் உள்ளிட்ட பகுதிகளிலும் படையினர் தீவிர பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## - தூத்துக்குடி - கொழும்பு இடையே -

# கப்பல் சேவையை உடன் ஆரம்பிக்கக் கோரி வியாபாரிகள் மனித சங்கிலிப் போராட்டம்

தூத்துக்குடிக்கும், கொழும்பிற்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்கக் கோரி, தூத்துக்குடி வியாபாரிகள் மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.


சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்துக்கு இடம்பெற்ற இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில், ஆயிரக்கணக்கானோர் கைகோர்த்து நின்றனர்.

தூத்துக்குடிக்கும், கொழும்புத் துறைமுகத்துக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்துக்கு தமிழ் நாடு அரசு தடை விதிக்கக் கூடாது எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

மனிதச் சங்கிலிப் போராட்டத்தை முன்னிட்டு, தூத்துக்குடியில் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

# சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே வெளியேறவேண்டும்!

## - சிங்கள தேசப்பற்றாளர் இயக்கம் கோரிக்கை



(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில், அனுசரணையாளர் பங்கு வகிக்கும் நோர்வையை அதிலிருந்து விலகுமாறு சிங்களத் தேசப்பற்றாளர் இயக்கம் கோரியுள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச உட்பட பல சிங்கள அரசியல் வாதிகள் கையொப்பமிட்டு நோர்வேப் பிரதமர் மக்னே பொன்டவிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிகையை விடுத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் பல விடுதலைப் புலி உறுப்பினர்களை பயிற்சிக்காக நோர்வேக்கு அழைத்து சென்றுள்ளார். இது அனுசரணையாளர் என்ற நிலையிலிருந்து அவர் விடுதலைப் புலிகள் பக்கம் சார்ந்து ஒரு தலைப்பட்சமாக நடப்பதனையே காட்டுகின்றது.

எனவே, இலங்கையின் சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே உடனடியாக வெளியேறவேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நோர்வே தமிழ்ச் சங்க விழாவில் கலந்து கொள்ளவுள்ள நிலையில் இவர்களின் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்க ஜப்பானிலிருந்து சொகுசு வாகனம்

## - அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய சொகுசு வாகனங்கள் ஜப்பானிடமிருந்து கொள்வனவு செய்யப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை வழங்குமாறு அமைச்சரவையிடம் கோரியுள்ளதாகவும், அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும், முன்னர் தீர்மானித்தபடி இந்திய வாகனங்களைப் பெறுவதற்குப் பதிலாக புதிய ஜப்பானிய வாகனங்கள் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வெளிமாவட்டங்களிலிருந்து நாடாளுமன்றம் வர வேண்டிய தேவையுள்ளதாலும், அவர்கள் நடுத்தர வாழ்க்கைத் தரத்தையுடையவர்கள் என்பதாலுமே, அவர்களுக்கு வாகனங்கள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மருந்துப் பொருட்கள் அத்தியாவசியமானதா

## - ஆராய செப்ரெம்பர் 3இல் கூட்டம்

(கொழும்பு)

மருந்துப் பொருட்களை அத்தியாவசியப் பொருட்களாக பிரகடனப்படுத்துவது தொடர்பாக வர்த்தக நுகர்வோர் அமைச்சருக்கும் பிரபல மருந்து இறக்குமதி நிறுவனஙகளுக்குமிடையிலான முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரபல மருந்து இறக்குமதியாளர்கள் மருந்து விற்பனையில் முன்னணியிலுள்ள வர்த்தகக் கம்பனிகள் பங்கேற்கும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது, மருந்தை அத்தியாவசியப் பொருளாக்குவதா? இல்லையா? என்ற தீர்மானம் எடுக்கப்படும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவத்தது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, மருந்துகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், மருந்து இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்களிடம் அமைச்சர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வாரென மேற்படி அமைச்சு தெரிவித்தது.

## 14850 மாணவர்கள் பல்கலைக்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2004/2005 ஆம் கல்வியாண்டுக்காக 14850 மாணவர்களை தெரிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டைவிட இம்முறை 390 மாணவர்கள் மேலதிகமாகத் தெரிவுசெய்யப்படவுள்னர். பல்கலைக் கழகங்களில் நடைமுறையில் உள்ள பாட நெறிகளுக்கென இந்த மேலதிக 390 மாணவர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

## - தொண்டராசிரியருக்கு -

# நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நியமனம் வழங்கப்படாத தொண்டர் ஆசிரியர்களுக்கு, நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருபவர்களுக்கு நியமனம் வழங்குமாறு கல்வி அமைச்சுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும், இதனை அடுத்து, கல்வி அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் முதற் கட்டமாக நாட்டிலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது என்றும்,

தொண்டர் ஆசிரியர்கள் தமது நியமனம் குறித்து முன்வைத்த ஆலோசனைகள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## விவசாய ஆலோசகர்களாக 200 பேர் விரைவில் நியமனம்


(யாழ்ப்பாணம்)

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நாடு முழுவதிலும் இருநூறு விவசாய ஆலோசகர்களை உடனடியாக நியமிக்குமாறு காணி, விவசாய, கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அநுர திஸநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த அவசரப் பணிப்புரையை தனது அமைச்சு அதிகாரிகளுக்கு அமைச்சர் வழங்கி இருப்பதாக அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் இருநூறு விவசாய ஆலோசகர் பதவிகள் வெற்றிடமாக வுள்ளன. இதனை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்தே இந்தப் பணிப்புரை அவரால் விடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம்; முதல் 3 இடங்களும் அமெரிக்காவுக்கு



(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் நேற்றுமுன்தினம் இரவு ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம் நடந்தது. இதில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தியது. முதல் 3 இடங்களையும் அமெரிக்க வீரர்களே பிடித்தனர்.

ஷோன் குரோபோர்ட் 19.79 வினாடியில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார்.

பேனார்ட் வில்லியம்ஸ் 20.01 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். 100 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்த ஜஸ்டின் கேட்லின் 20.03 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.

400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் டொமினிக் குடியரசு வீரர் பெலிக்ஸ் சான்செஸ் தங்கப் பதக்கம் பெற்றார். அவர் பந்தயத் தூரத்தை 47.63 வினாடியில் கடந்தார். ஜமேக்கா வீரர் டேனி 48.11 வினாடியில் கடந்து 2 ஆவது இடத்தையும், நாமேன் கெய்டா (பிரான்ஸ்) 48.26 வினாடியில் கடந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

ஸ்பெயின் வீரர் மார்ட்டினஸ் 8.32 மீற்றர் தூரம் தாண்டி வெண்கலப் பதக்கம் பெற்றார்.

பெண்களுக்கான உயரம் தாண்டும் போட்டியின் தகுதிச் சுற்றில் இந்திய வீராங்கனை பாபி அலோசியஸ் பங்கேற்றார். அவரால் 1.80 மீற்றர் உயரமே தாண்ட முடிந்தது. இதனால் இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெறும் வாய்ப்பை அவர் இழந்துவிட்டார்.

பெண்களுக்கான 400 மீற்றர் தொடர் ஓட்டத்தின் தகுதிச்சுற்று நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் இந்திய வீராங்கனைகளும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.




## பெண்கள் உதைபந்தாட்டத்தில் அமெரிக்கா சம்பியன்

பெண்கள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அமெரிக்க - பிரேசில் அணிகள் மோதின. இதில் அமெரிக்கா 2-1 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

3 ஆவது இடத்துக்கான போட்டியில் ஜேர்மனி 1-0 என்ற கோல் கணக்கில் சுவீடனைத் தோற்கடித்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றது.

# முதல் தங்கத்தை பெற்றது இஸ்ரேல்!

ஒலிம்பிக்கில் இஸ்ரேல் முதல் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

ஏதென்சில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாய்மரப் படகுப் போட்டியில் கோல் ஃபிரிட்மன் முதலிடம் பெற்று இஸ்ரேலுக்கு தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

தங்கப் பதக்கம் கிடைத்தது குறித்து இஸ்ரேல் ஜனாதிபதி மோசே சத்சவ் மிகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். நாட்டு மக்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

1952 இல் முதன்முதலாக ஒலிம்பிக்கில் நுழைந்த இஸ்ரேல் 40 ஆண்டுகளுக்குப் பிறகு பார்சிலோனா போட்டியில் முதல் பதக்கத்தைப் பெற்றது. கோல் ஃபிரிட்மன் வென்றது 2 ஆவது பதக்கமாக அமைந்தது.

# பெண்கள் ஹொக்கி போட்டி; ஜெர்மனிக்கு தங்கப்பதக்கம்



பெண்கள் ஹொக்கி இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் ஜெர்மனி-ஹொலன்ட் அணிகள் மோதின. இதில் ஜெர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் வென்று தங்கப் பதக்கம் பெற்றது.

ஆர்ஜென்ரீன அணி 1-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது. நியூஸிலாந்து, அவுஸ்ரேலியா, கொரியா, ஸ்பெயின், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் முறையே 5 முதல் 10 இடங்களைப் பிடித்தன.




## ஆண்கள் பிரிவு ஹொக்கி

# அவுஸ்ரேலியா - ஹொலன்ட் இன்று மோதுகின்றன!

ஏதென்ஸ் ஒலிம்பிக் ஆண்கள் பிரிவு ஹொக்கியின் இறுதிப் போட்டியில் தற்போதைய சம்பியனான ஹொலன்டும் - அவுஸ்ரேலியாவும் மோதுகின்றன.

1996 ஆம் ஆண்டு அட்லாண்டா மற்றும் 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ஹொலன்ட், கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத் தில் 3-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்ரேலியா 6-3 என்ற கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் ஸ்பெயினும் - ஜேர்மனியும் மோதுகின்றன.

இந்த ஆட்டங்கள் அனைத்தும் இன்று நடைபெறுகிறது.

# ஒலிம்பிக் பெண்கள் கரப்பந்தாட்டம் இறுதிப் போட்டியில் ரஷ்யா - சீனா!



(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் பெண்கள் கரப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

ஒரு ஆட்டத்தில் ரஷ்யா - பிரேசில் அணிகள் மோதின. இதில் ரஷ்யா 18-25, 21-25, 22-25, 28-26, 16-14 என்ற செட் கணக்கில் கடுமையாகப் போராடி வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இந்த வெற்றியைப் பெற ரஷ்யாவுக்கு 2 மணி 14 நிமிட நேரம் தேவைப்பட்டது.

மற்றொரு அரையிறுதியில் கியூபா - சீன அணிகள் மோதின. இதில் கியூபா அதிர்ச்சிகரமாகத் தோற்றது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அணி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்திருக்கிறது.

சீனா 25-22, 25-20, 17-25, 23-25, 15-10 என்ற செட் கணக்கில் கியூபாவைத் தோற்கடித்தது. ரஷ்ய - சீன அணிகள் மோதும் இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

# தீர்ப்பு சர்ச்சையில் ஏதென்ஸ் ஒலிம்பிக்!

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஹொக்கி ஆட்டத்தில் நியூஸிலாந்திடம் 2-1 என்ற கோல் கணக்கில் இந்திய ஆண்கள் பிரிவு தோல்வியடைந்தது.

ஆட்டம் முடிந்த பிறகு ஸ்பெயின் நடுவர் சேவியர் அதெல் கொடுத்த பெனால்டி வாய்ப்பே தோல்விக்குக் காரணம் என இந்திய அணி நிர்வாகம் முறையீடு செய்தது. ஆனால் அது நிராகரிக்கப்பட்டது.

ஜிம்னாஸ்டிக், நீச்சல், குதிரையேற்றம், படகுப் போட்டி, வாள் சண்டை ஆகிய போட்டிகளில் வழங்கப்பட்ட பதக்கங்கள் குறித்தும் முறையீடுகள் எழுப்பப்பட்டுள்ளன.

இதற்கிடையே தங்கப் பதக்கப் போட்டி குறித்து தவறான முடிவு கொடுத்ததாக 3 ஜிம்னாஸ்டிக் நடுவர்களும், ஒரு வாள் சண்டை நடுவரும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் பல்வேறு சர்ச்சைகள் நிலவினாலும், அமெரிக்க ஜிம்னாஸ்டிக் வீரர் போல் ஹாமுக்கு பதக்கம் அளித்ததே சர்ச்சைகளின் உச்சக்கட்டமாக அமைந்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் தென்கொரிய வீரர் யாங் டே யங்ஸுக்கு நீதிபதிகள் தவறான புள்ளியைக் கொடுத்ததாலேயே ஹாமுக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது. இதனால் யாங் டே வெண்கலப் பதக்கத்தையே பெற்றார் என புகார் எழுந்துள்ளது.

இதனை எதிர்த்து கொரிய அரசு முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக சச்சின் டெண்டுல்கரே திகழ்கின்றாராம்!

## பேரி ரிச்சர்ட்ஸ் கூறுகிறார்



(அம்ஸ்டர்டாம்)

உலகததின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக சச்சின் டெண்டுல்கர் தான் என்று தென்னாபிரிக்காவின் முன்னாள் ஆரம்ப வீரரான பேரி ரிச்சர்ட்ஸ் கூறினார்.

சமீப காலங்களில் டெண்டுல்கரது துடுப்பாட்டத் திறன் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவிவரும் சூழ்நிலையில் தலைசிறந்த ஆரம்ப வீரர்களில் ஒருவரான பேரி ரிச்சர்ட்ஸ் மனந்திறந்து பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டிகள் தற்போது ஹொலன்டில் நடைபெற்று வருகின்றது. அங்கு வருகை தந்த பேரி ரிச்சர்ட்ஸ் - அம்ஸ்டர்டாமில் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துக் கூறுகையில் -

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக இன்னும் டெண்டுல்கர் தான் தொடர்ந்து நீடித்து வருகிறார். அவருக்கு வயது ஏறுவதால், முன்பைவிட தற்போது ஸ்கொயர் திசையில் அதிகமான ஷொட்களை அடிக்கிறார் என்பதை ரிச்சர்ட்ஸ் சுட்டிக்காட்டினார்.

ஒரு துடுப்பாட்ட வீரருக்கு வயது முதிர்ச்சியாகும்போது ஸ்கொயர் திசையில் அதிகமான ஷொட்களை விளையாடவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இளம் வீரர்களைப் போல கண்ணில் படும் பந்துகளையெல்லாம் ஷொட்டாக மாற்றிவிடமுடியாது. பந்துகளை லேசாக ஷொட் அடிப்பதைவிட அது வரும் வேகத்தில் திருப்பிவிட்டு அதிக ஓட்டங்கள் பெறுவது நல்லது என்றும் அவர் கூறினார்.

மேலும் தற்போதைய இளம் பந்துவீச்சாளர்கள் நன்றாகப் பந்து வீசுகின்றனர். அவர்கள் மாறுபட்ட (லைன் அன்ட் லென்த்) அளவுகளில் பந்துவீசுகின்றனர்.

இருந்தபோதிலும் டெண்டுல்கர் தான் இன்னும் சிறந்த துடுப்பாட்ட வீரராக இருந்துவருகிறார். அவர் விக்கெட்டைச் சுற்றி அனைத்து கோணங்களிலும் பந்தை அடிக்கும் திறமையுடையவராக இருக்கிறார். உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக இன்னும் அவர்தான் இருந்துவருகிறார் என்றும் ரிச்சர்ட்ஸ் மேலும் தெரிவித்தார்.

## உக்ரைன் படகு குழுவின் பதக்கம் பறிபோனது

(ஏதென்ஸ்)

4 பேர் கொண்ட ஸ்கல் படகுப் போட்டியில் உக்ரைன் குழு வெண்கலப்பதக்கம் வென்றது. அதில் ஒலெனா ஒலெபிரேங்கோ தடைசெய்யப்பட்டிருந்த ஊக்கமருந்தை உட்கொண்டிருந்தமை ஆய்வில் தெரியவந்தது.

இதையடுத்து அந்தக் குழுவின் பதக்கம் பறிபோனது. 4 ஆவது இடத்தில் இருந்த அவுஸ்ரேலியா வெண்கலப் பதக்கத்துக்கு உயர்ந்தது. இந்தப் போட்டியில் ஜெர்மனி தங்கப் பதக்கத்தை பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வட்டக்கச்சியில் இடம்பெற்றுவரும்

# உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாம் நாள் முடிவுகள் வருமாறு

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாள் போட்டிகள் வட்டக்கச்சி மைதானத்தில் நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிவரை இடம்பெற்றது.

இதில் முதலாவது போட்டி ஸ்கந்தா பரந்தன் மத்தி அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் ஸ்கந்தா அணி 4:0 என்ற கோல் அடிப்படையில் பரந்தன் மத்தியை வென்றது.

இரண்டாவது போட்டி உழவர் ஒன்றிய பி மற்றும் இளைஞர் வட்ட ஏ அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் இளைஞர் வட்ட ஏ அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மூன்றாவது போட்டி திருநகர் - உதயதாரகை அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் உதயதாரகை 3:1 என்ற கணக்கில் வென்றது.

நான்காவது போட்டி சந்திரோதயா - சுப்பராங் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் பெற்ற நிலையில் சுப்பராங் வீரர் ஒருவருக்கு மத்தியஸ்தர் சிவப்பு அட்டை காட்டியவேளை அதனை அந்த அணி வீரர்கள் பறித்து எறிந்ததனால் சந்திரோதயா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஐந்தாவது போட்டி விக்னேஸ்வரா - ஜொனி அணிகளுக்கிடையில் நடைபெறவிருந்தபோதும், விக்னேஸ்வரா அணி சமுகமளிக்காத காரணத்தால் ஜொனி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.


ஆறாவது போட்டி ஜெகமீட்பர்- உருத்திரபுரம் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் இரு அணிகளும் 1:1 என்று சமநிலையில் கோல் பெற்றதனால் தண்டனை உதை வழங் கப்பட்டது. இதில் உருத்திரபுரம் 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஏழாவது போட்டி இளந்தளிர் - ஜொனிபர் அணிகளுக்கிடையில் இடம்பெறவிருந்தும், ஜொனிபர் அணி சமுகமளிக்காத காணரத்தால் இளந்தளிர் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (09)

# உங்கள் கைவண்ணம்




பு.சுமித்ரா
தரம் - 9
குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்



சி.நிரோஜன்
தரம் - 4
யாழ்ப்பாணக் கல்லூரி

# அதி வேகம்



1950 ஆம் ஆண்டுகளிலிருந்து அமெரிக்காவின் விண்வெளி தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சியடைந்தது.

22.08.1962 இல் அமெரிக்காவின் எக்ஸ் -15 எனும் விண்கலம் பூமியிலிருந்து 354,200 அடிக்கு அப்பால் சென்றது.

ஜோ வோல்கர் என்பவர் இந்த விண்கலத்தைச் செலுத்தினார். 300,000 அடி உயரத்தைக் கடந்த முதல் விண்கலம் இது.

ச.அர்ச்சனா, தரம் - 8
இணுவில் மத்திய கல்லூரி

# அதிசயம் ஆனால் உண்மை

- 10,000 வகையான வாசனைகளை மனிதர்களால் பிரித்துணர முடியும்.
- உலகத்திலேயே மிக மூத்த பறவையினம் வல்லூறுகள். அவற்றுள் சில 150 வருடங்கள் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. பூச்சிகளைத் தின்னும் வல்லூறுகளினால் 1/2 மைல் தூரத்தில் இருக்கும் வெட்டுக்கிளியைப் பார்க்க முடியும்.
- 1 1/4 மணி நேரத்தில் ஒரு சிலந்தி 150 முழம் பட்டுநூலை நூற்கிறது.
- பசுவின் நாக்கு தனித்தன்மை உடையது. எங்களுடைய கை ரேகையைப் போல் அதனுடைய நாக்கிலும் கோடுகள் உண்டு. ஒவ்வொரு பசுவின் நாக்கின் கோடுகளும் வெவ்வேறாக இருக்கும்.
- பூமி ஒரு நிமிடத்துக்கு 29 கிலோ மீற்றர் வேகத்தில் சுழல்கிறது. வீட்டு இலையான் அதனுடைய மொத்த வாழ்நாளில் தான் பிறந்த இடத்தை விட்டு சில நூறு அடிகளுக்கு மேல் பயணம் செய்வதில்லை.
- வைரம் அமிலத்தில் கரையாது. மிக அதிகமான உஷ்ணத்தில் மட்டுமே வைரம் அழிக்கப்படும்.
- பூனையின் கண்கள் இரவில் பிரகாசமாகத் தெரிகின்றன. பூனையின் உள்க் கண்களுக்குள் ஒரு செல் படலம் ஒளியைப் பிரதிபலிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.

# பொது அறிவு

1. உலகில் மிகப்பெரிய நீர் வீழ்ச்சி எது?
2. உலகில் மிகப் பெரிய நீளமான குகை எது?
3. உலகில் மிகப் பெரிய நகரம் எது?
4. ஐரோப்பிய நாட்டின் முதல் பெண் பிரதமர் யார்?
5. உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் முதல் பெண் பிரதமர் யார்?



விடைகள்:
1. ஏஞ்சல்
2. சகாரா
3. டோக்கியோ - ஜப்பான்
4. மாக்கிரட் தட்சர்
5. இந்திரா காந்தி

கிறிஸ்டினா டியுலக்ஷி
உடுவில் மகளிர் கல்லூரி.

# சித்திரக் கதை

## எங்கே நூல் பந்து?




பாட்டி நித்திரை. பூனை நூல் பந்தை உருட்டியது.



நூல் பந்து புரண்டது, உருண்டது



வேகமாக உருண்டு மறைந்தது நூல்பந்து.



பூனை அறியாது நூல் பந்து மறைந்த விதம்

# முல்லாவின் உண்ணாவிரதம்

மூன்று நாட்களாக முல்லா - உண்ணாவிரதம் இருக்கிறார் என்று கேள்வப்பட்ட நண்பர்கள் - அவர் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அவருக்கு அவரது மனைவி சிறு கரண்டியால் சோறூட்டிக்கொண்டிருந்தார். இதைக்கண்ட அவரது நண்பர்கள் - என்ன முல்லா இதுதான் உண்ணாவிரதமா? எனக் கேட்டனர். அதற்கு முல்லா - நண்பர்களே! நானே உண்ணாமல் விரதமிருப்பது உண்மைதானே. இன்னொருவர்தானே எனக்கு ஊட்டிவிடுகிறார் என்றார்.

இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்



**சிந்தனைக்கு!**
எது அழகோ அது எப்போதும் நல்லதாக இருப்பதில்லை. ஆனால், எது நல்லதோ அது எப்போதும் அழகாகவே இருக்கும்.

# ஜிம்மி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

தோட்டத்தில் வளர்ந்திருக்கும் பச்சைப்புல் தரையில் விழுந்து புரள்வதில் எனக்கு விருப்பம் அதிகம். தோட்டத்தில் வீசிடும் குளிர்மையான காற்று - பச்சைப் புற்களோடு சேர்ந்து, எனது மென்மையான உரோமத்தை வருடும்போது எவ்வளவு நல்லாயிருக்கும் தெரியுமா, தோட்டத்துப் பச்சைப்புல் தரையில் விழுந்து, ஆசை தீரப் புரண்டு, பின்னர் அங்கு நின்ற மலர்ச் செடி ஒன்றினருகே சென்று, மலரில் தேன்குடிக்கும் தேனீயாரை வியப்போடு வேடிக்கை பார்த்திருந்தேன்.




கடைக்கண்ணால் என்னைப் பார்த்தவாறு ஆனந்தமாகத் தேனை உறிஞ்சிக் குடித்துக்கொண்டிருந்தார். தேனியார்.



அவரைத் தொந்தரவு செய்யாது, . அந்த இடத்தை விட்டு மெதுவாக நகரலாம் என்று நினைத்தேன். அந்தவேளையிலே கறுப்பனின் மியாவ் என்ற குரல் - தோட்டத்தையே அதிரச் செய்யுமாறு, ஓங்கி ஒலித்தது. கறுப்பன் போட்ட சத்தம் என்னை மட்டுமல்லாது, மலரிலே ஆனந்தமாகத் தேன் குடித்திருந்த தேனீயாரையும் கிலி கொள்ளச் செய்தது.

தேனியார் அளவில்லாத கோபம் கொண்டார். தேவையில்லாமல் சத்தம் போட்டு, தேன் குடிப்பதை திட்டம் போட்டுக் கெடுத்தது, நான் தான் என நினைத்த தேனியார் - வெகு வேகமாக என்னைநோக்கிப் பறந்துவந்தார். தேனியார் தமது பொல்லாத கொடுக்கால் கொட்டினால் எப்படியிருக்கும் என்று எனது நண்பன் ஒருவன் முன்பு என்னிடம் சொல்லியிருக்கிறான்.



ஒருவாரகாலமாக அவன் வலி தாங்கிட முடியாது அழுது கொண்டே இருந்தானாம். நண்பன் சொல்லியதெல்லாம் சடுதியில் எனக்கு நினைவுக்கு வந்தது. அதற்கு மேலும் அந்த இடத்திலே நின்றிருக்க நான் முட்டாளா என்ன?


விரைந்து தோட்டத்திலிருந்து வீட்டைநோக்கி ஓட்டம் பிடித்தேன். பல தெருக்களைத் தாண்டி ஓடியபோதும், தேனியார் என்னைத் துரத்திவருவதை நிறுத்திவிடவில்லை.

அவரிடம் உண்மையைச் சொன்னால், அவர் கேட்கும் நிலையிலும் இல்லை. குறைந்தது 10 தடவைகள் கொட்டியதன் பின்னர்தான் அவரது கோபம் சிறிதளவாவது தணியும் போலிருந்தது.

மூச்சிரைக்க ஓடிக்கொண்டிருந்த என் கண்முன்னே - அதிஷ்டவசமாகத் தாமரைக் குணமொன்று காட்சிகொடுத்தது.

கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு, பாய்ந்து ஒரே ஓட்டமாக ஓடி, தொப்பென்று தாமரைக் குளத்தில் குதித்தேன். தண்ணீரின் உள்ளே குதித்து நீந்த தேனியாரால் முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும்.


அதையும் முன்பு தேனியாரிடம் கொட்டுவாங்கி அனுபவப்பட்டிருந்த எனது நண்பன் - எனக்குச் சொல்லியிருந்தான். சொன்னால் நம்பமாட்டீர்கள் நான் குளத்தில் குதித்திடும் வேளையில், கறுப்பனின் மியாவ் என்ற குரல் குளக்கரையின் செடிகளின் மறைவிலிருந்து கேட்டது.



வீட்டிலிருந்த கறுப்பன் - அதற்குள் குளக்கரைக்கு எப்படி வந்திருப்பான் என்ற சந்தேகத்தில், என்னருகே வந்த மீனாரிடம், மீனாரே மியாவ் எனறு சத்தம் எழுப்பியது நீரோ? என்று ஆவலுடன் கேட்டேன்.

என்னைக் கோபத்துடன் பார்த்த மீனார் - குட்டி நாயாரே என்னைப் பார்க்கப் பகிடியாக இருக்கிறதா என்ன உமக்கு? என்னைப் பிடித்துச் சாப்பிடுவதற்காகக் குளக்கரையிலே பல மணி நேரமாகக் காத்திருக்கும் கொடியவனான அந்தக் கறுப்புப் பூனையனைப் போல கத்தி, மகிழுவதற்கு நான் பைத்தியக்காரனா என்ன என்று கேட்டார்.

கறுப்பன் குளக்கரையில் ஒளித்திருக்கிறானா? என்று மீனாரைப் பார்த்து ஆவேசத்துடன் கேட்டேன். அதோ குளக்கரையில் வளர்ந்திருக்கும் புற்செடிகளின் பின்னால் சென்று பாரும், கள்ளனைப் போலப் பதுங்கியிருக்கும் உமது நண்பன் கறுப்புப் பூனையனைச் சந்தித்திடலாம் என்று கோபத்தோடு சொல்லி விட்டு, வேகமாக ஓடி மறைந்தார் மீனார்.



கறுப்பனைத் தவறுதலாக எனது நண்பன் எனறு நினைத்து விட்ட மீனாருக்கு, உண்மையை விளக்கிச் சொல்வதற்கு முன்னர் ஓடிப்போய் விட்டாரே என்ற கவலையோடு குளத்துத் தண்ணீரிலே நீந்திக் கரைசேர முயன்றேன்.

கஷ்டப்பட்டுத் தண்ணீரில் நீந்திக் கரையேறினேன். குளக்கரையிலே தேனீயார் எங்காவது தென்படுகிறாரா என்று கனவமாகப் பார்த்தேன்.

தேனீயாரைக் காணவில்லை. அப்பாடா என்ற பெருமூச்சோடு நனைந்த எனது உடலைப் பலமாகக் குலுக்கி, ஈரத்தைப் போக்க முயன்றிருந்தேன்.

யோ.சத்யன்

(தொடரும்...)

## மூளைக்கு வேலை

1. ஆறு பொம்மைகள் இருக்கின்றன. ஒருவருக்கு இரு பொம்மைகள் படி - இரு தந்தையருக்கும், இரு மகன் களுக்கும் பிரித்துத்தரவேண்டும். எப்படிப் பிரிக்கப் போகி றீர்கள்?

2. ஒரு குதிரைப் பொம்மையின் விலை ரூபா 40. இது ஒரு யானைப் பொம்மையின் விலையைவிட ரூபா 20 குறைவு. யானைப் பொம்மையின் விலை என்ன?

3. நான்காம் பின்னத்தின் மேல் என்ன எண் வரும்?

$\frac{3}{9}$ $\frac{5}{25}$ $\frac{7}{49}$ $\frac{?}{64}$

4. அடுத்து என்ன எண் வரும்?
3, 6, 18, 72 .......?

5.

| | | |
|---|---|---|
| 7 | 3 | 5 |
| 4 | ? | 6 |
| 4 | 7 | 4 |

## ஓவியப்போட்டி முடிவுத் திகதி 10.09.2004

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண் ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :.................................

கற்கும் பாடசாலை :.................................

கற்கும் தரம் :.................................

வீட்டு முகவரி :.................................

.................................

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................

கற்கும் பாடசாலை :.................................

கற்கும் தரம் :.................................

வீட்டு முகவரி :.................................

பிறந்த திகதி :.................................

ஆர்வமுள்ள துறைகள் :.................................

.................................

................ ................
திகதி ஒப்பம்

................ ................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## விடுகதைகளும் விடைகளும்

1. மழையில் நனைவேன், வெயிலில் காய்வேன், வெளியில் விரிவேன், வீட்டில் சுருங்குவேன். நான் யார்?
2. தூய்மையானால் கறுப்பாவேன், அழுக்கானால் வெள்ளையாவேன். நான் யார்?
3. பல் இருக்கும் கடிக்காது. அது என்ன?
4. நாலு கால்கள் உண்டு, நடக்கத் தெரியாது. நான் யார்?
5. இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?

### விடைகள்

1. குடை
2. கரும்பலகை
3. சீப்பு
4. கதிரை
5. மணிக்கூடு

த.துவர்சனா
ஆண்டு- 2
அச்சுவேலி சென் தெரேசாள்
மகளிர் கல்லூரி.

இங்கே மடிக்கவும்



## அன்புள்ள சிறுவர்களே!



மனிதர்கள் குறைபாடுள்ளவர்கள். எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தவறிழைத்தவர்களாகவே இருக்கின்றோம். தவறு கள் செய்யாத மனிதர்களே இல்லை எனலாம்.

எனவே, தெரியாமல் நீங்கள் தவறுவிடுகின்ற போது அதற்காக வருந்தாதீர்கள். எத்தனையோ பெரிய மனிதர்கள் கூட தவறுவிட்டவர்கள் தான். ஆனால், அவர்களின் வெற்றிக்குக் காரணம், அந்தத் தவறுகளில் இருந்து பெற்றுக் கொண்ட அனுப வம் தான்.

தவறிழைத்து விட்டோமே என்று எண்ணி வருந்தவோ, நம்பிக்கை யிழக்கவோ வேண்டாம். உங்களு டைய தவறுகளுக்காக வருத்தி நேரத்தை வீணடிக்கவும் கூடாது. தவறுகளிலிருந்து படிப்பினையைப் பெற்றுக் கொள்ளுங்கள். மீண்டும் அந்தத் தவறை விடாமல் இருக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

பாசங்களுடன் சாரு அக்கா.

## இதிலுள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## என்னைப்பற்றி

எனது பெயர் மு.நிவிதா
நான் இரண்டாம் தரத்தில் படிக்கிறேன்.
எனது அப்பாவின் பெயர் சி.முருகேசு.
எனது அப்பா தபால் ஊழியராகக் கடமையாற்றுகிறார்.
எனது அம்மாவின் பெயர் மு.இராஜேஸ்வரி
எனது அம்மா உபதபால் அதிபராக கடமையாற்றுகிறார்.
எனக்கு ஒரு அண்ணாவும், இரண்டு அக்காவும் இருக்கிறார்கள்.
நான் யாழ். கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் கல்வி கற்கிறேன்.
எனது எதிர்கால இலட்சியம் வைத்தியராக வரவேண்டும் என்பதே ஆகும்.

# ஒலிம்பிக்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அந்த அகழ்வாராய்ச்சியில் ஒலிம்பிக் அரங்கங்கள் உட்பட பல அரிய விடயங்கள் மீண்டும் உலகின் பார்வைக்கு வந்தது. புராதன ஒலிம்பிக் போட்டிகள் பற்றியும், கிரேக்கர்கள் நடத்திய அற்புதமான இந்த விளையாட்டுத் திருவிழா பற்றியும் வெளிச்சம் பரவியது.

நவீன ஒலிம்பிக் போட்டிகளுக்கான விதை இங்கு தூவப்பட்டது. விதையைத் தூவியவர் பிரெஞ்சுக்காரர் - பாரோன் பியரி டி கோபர்டின். 1863 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பிறந்த கோபர்டின் ஒரு சிறந்த விளையாட்டுப் பிரியர். தடகளம் உள்ளிட்ட பல விளையாட்டுக்களில் அவர் ஒரு நிபுணர். மிக வசதியான, செல்வாக்கான குடும்பத்தில் பிறந்த கோபர்டின் கவனத்துக்கு ஒலிம்பிக் அகழ்வாராய்ச்சி விடயம் தெரிய வந்தது.

ஒலிம்பிக் போட்டிகளைப் புதுப்பித்து, ஏன் மீண்டும் நடத்தக்கூடாது? என்ற கேள்வியுடன் - 1892 ஆம் ஆண்டு இந்தத் தடகள அமைப்புக்ளைக் கூட்டி, தனது ஒலிம்பிக் கனவை வெளிப்படுத்தினார். ஆனால், அவரது பேச்சுக்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கோபர்டின் தனது முயற்சியில் மனம் தளரவில்லை. ஒலிம்பிக் போட்டிகளுக்குப் புத்துயிர் அளிக்கும் பணியில் மேலும் மேலும் அதிக அக்கறை செலுத்தினார். தனது கருத்தை மதிக்கும் ஒரு அமைப்பை அவர் உருவாக்கினார். 12 நாடுகளைச் சேர்ந்த 79 பிரதிநிதிகளை அவர் 1894 ஆம் ஆண்டில் ஒன்று திரட்டினார். ஒலிம்பிக் போட்டிகளுக்குப் புத்துயிர் அளிக்க ஒரு மாநாட்டை நடத்தினார் கோபர்டின். அந்த மாநாட்டில் அவரின் கருத்துக்கு ஒட்டுமொத்த ஆதரவு கிடைத்தது.

ஒலிம்பிக் போட்டிகள் பிறந்த இடமான கிரிஸ் நாட்டின் - ஒலிம்பியா நகரிலேயே மீண்டும் நவீன ஒலிம்பிக்கின் முதல் போட்டி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய கி.பி.1896 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கிரிஸ் நாட்டின் ஒலிம்பியா மலைப்பகுதியில், நவீனகால ஒலிம்பிக் போட்டிகள் முதன் முதலாகத் தொடங்கப்பட்டன. அன்று தொடங்கிய ஒலிம்பிக் - பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்டு, இந்தமுறை மீண்டும் ஏதென்ஸ் நகரில் நடைபெறுகிறது. இதுவே ஒலிம்பிக்கின் வரலாற்றுப் பெருமையாகும்.

காலத்தால் அழியாத ஒலிம்பிக் விளையாட்டை, மீண்டும் உலகுக்கு அறிமுகப் படுத்திய கோபர்டின் - நவீன ஒலிம்பிக்கின் தந்தை என்று புகழப்படுகிறார். அவர் 1937 ஆம் ஆண்டு மாரடைப்பால் திடீரெனக் காலமானார். எந்த நேரமும் ஒலிம்பிக்கை நேசித்துக்கொண்டிருந்த அவரது இருதயம் - நிரந்தரமாக ஒலிம்பியாவில் இருக்க வேண்டும் என்பதுதான் அவரது கடைசி ஆசை. அவரது ஆசைப்படியே, கோபர்டின் இருதயம் மட்டும் கிரீஸ் நாட்டின் ஒலிம்பியாவில் புதைக்கப்பட்டது. அதற்குமேல் கோபர்டின் பெயரை என்றென்றும் நினைவுகூரும் வகையில் ஒரு நினைவுத் தூண் அமைக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டிகளுக்கு உயிர்கொடுக்கக் கோபர்டின் நடத்திய மௌனப் போராட்டங்களுக்கு ஒரே சாட்சியாக, அந்த நினைவுத்தூண் ஒலிம்பியா மலையில் இன்னமும் இருக்கிறது.

கிரேக்க நாட்டில் பிறந்து, உலகெல்லாம் சுற்றி வளர்ந்து மீண்டும் இப்போது பிறந்த மண்ணுக்கே திரும்பியிருக்கிறது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி. இந்த விளையாட்டுப் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப் படுகின்றது.

**ஒலிம்பிக்கின் சின்னம்** - ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட ஐந்து வளையங்க ளாகும். இந்த வளையங்களின் வண்ணங்கள் நீலம், சிவப்பு, கறுப்பு, பச்சை, மஞ்சள் ஆகும். இந்த ஐந்து பின்னப்பட்ட வளையங்களும் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா என்ற ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றது.

**ஒலிம்பிக்கின் கொடி** - வெள்ளைப் பின்னணியில் அமைந்த ஐந்து வளை யங்களாகும்.

**ஒலிம்பிக்கின் குறிக்கோள்** - வேகம், உயரம், துணிச்சல், தற்கால பொருள், பறத்தல், வலிமை.

**ஒலிம்பிக் தீபம்** - ஒலிம்பியாவில் சூரியக் கதிர்கள் மூலம் ஒலிம்பிக் தீபம் தொடர் ஓட்டக்காரர்களால் எடுத்து வரப்படுகின்றது.

**ஒலிம்பிக்கின் கோட்பாடு** - ஒலிம்பிக் போட்டிகளில் வீரர்கள் பங்குபற்றி, சிறந்த முறையில் போட்டிபோடுவதே முக்கியமானது. வெற்றி பெறுவதல்ல முக்கியநோக்கம்.

**ஒலிம்பிக் சத்தியப் பிரமாணம்** - ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாட்டைச் சேர்ந்த போட்டியாளர்கள் ஆரம்ப நாளன்று பின்வருவனவற்றைப் படிப்பார்கள். 'ஒலிம்பிக் விளையாட்டுக்களின் சட்டதிட்டங்களை மதிப்பதற்காகவும், விளையாட்டின் மேன்மைக்காகவும், அணியின் சிறப்புக்காகவும், உண்மையான விளையாட்டு உணர்வுடன் செயற்படுவதாக, நாங்கள் இந்த ஒலிம்பிக்கில் கலந்து கொள்கின்றோம் என்பதைப் போட்டியாளர்களின் சார்பில் உறுதி கூறுகின்றேன்.' இந்த சத்தியப் பிரமாணமும், கோட்பாடும் நவீன ஒலிம்பிக்கின் தந்தையான பாரோன் பியரி டி கோபர்டினால் உருவாக்கப்பட்டது.

# உலக மயமாக்கல் திட்டத்துக்கு ஆங்கில மொழி அத்தியாவசியம்

## நிகொட் நிறுவன திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

எமது பிள்ளைகளுக்கு தாய் மொழிக் கல்வி அவசியம். ஆனால், உலகத்தின் ஒரு பகுதியாக இலங்கை இன்று இருந்து வருகிறது. உலக மயமாக்கல் திட்டம் உலகில் அரங்கேறுவதால், உலக மொழியாக மாறிய ஆங்கில மொழியை கற்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே, ஆங்கில மொழியை மாணவர்கள் கட்டாயம் கற்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண நிகொட் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் த. இலங்கா நேசன் தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டட தொகுதி திறப்பு விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் என்.சேதுராசா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இலங்காநேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்தத் துறையை கட்டியெழுப்ப, செப்பனிட உதவி புரிகின்ற நிகொட் நிறுவனம் 64 பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்பியுள்ளது.

வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றுகிறார்கள். இவர்களில் எத்தனைபேர் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல வாய்ப்புக்கிடைக்கிறது. பல்கலைக் கழகத்துக்கு செல்லாத மாணவர்கள் வேறு உயர்தர கல்வியைத் தொடரவேண்டுமாயின் ஆங்கில அறிவும், கணினி பயிற்சியும் அத்தியாவசியமாகும்.

உலகிலுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் எந்த வேலைகளை எடுத்துக்கொண்டாலும் அந்தவேலை தொடர்பாகக் கலந்துரையாடுதல் மிகக்குறைவு, அவை எல்லாம் கணினியிலேயே செயற்படுத்தப்படுகின்றன.

மாணவர்களின் வளர்ச்சிக்கு ஆங்கில அறிவும், கணினி பயிற்சியும் அவசியம். இவை இரண்டுக்கும் பாடசாலைகளும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஆங்கிலமும், கணினியும் தான் தற்போது உலகில் சாதனை படைத்து வருகின்றன.

பல்கலைக்கழகம் செல்லாத மாணவர்களே வேறுதுறைகளில் தேர்ச்சி பெறவேண்டுமானால், ஆங்கில அறிவும், கணினி பயிற்சியும் இருந்தால் தான் தேர்ந்தெடுக்கும் துறையில் முன்னேற்றத்தையும், அபிவிருத்தியையும் காணமுடியும்.

இந்த வித்தியாலயத்தில் ஈமெயில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகத்துடனான தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆசிரியர்களிடையே ஆங்கில அறிவை வளர்க்கும் பொருட்டு 30 இலட்சம் ரூபா செலவில் ஆங்கில பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு, ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. பயிற்சி பெறும் இந்த ஆசிரியர்களைக் கொண்டு நூறு மாணவர்கள் வீதம் விடுதியில் தங்க வைத்து ஆங்கிலப் பாடத்தை படிக்க வேண்டிய வசதி வாய்ப்புக்களை நிகொட் நிறுவனம் எதிர்காலத்தில் வழங்கும். இதற்கென 227 மில்லியன் ரூபாவை செலவிட திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

மாணவர்கள் நன்றாக வாசிக்க வேண்டும். வாசிப்பதுடன் நின்றுவிடாது தமிழ் மொழியுடன், ஆங்கிலம், சிங்கள மொழிகளையும் படித்து அந்த மொழிகளிலும் வாசிக்க, எழுத தெரிந்திருக்கவேண்டும். வாசிப்பின் மூலம் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணமுடியும். மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துக்காக இந்த வித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் பெறுமதியான நூல்கள் நிகொட் நிறுவனம் வழங்கும் என்றார். (17)

## சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும்

வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ. கற்பக விநாயகர் கோவில் சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அன்றைய தினம் அன்னதான நிகழ்வுகளும் நடைபெறும் என தர்ம பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (64)

## கலட்டி வீதி திருத்தப்படாமல் உள்ளது

(கலட்டி)

கலட்டி சீனியர் ஒழுங்கை வீரகத்தி பிள்ளையார் கோவில் வீதி போக்குவரத்துக்கு உதவாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

கடந்த பல வருடங்களாக இந்த வீதி திருத்தப்படாமல் இருப்பதனால் இந்த வீதியால் போக்குவரத்திலீடுபடும் வாகனங்களும், பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## வாகனப் பரிசோதகருக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 11 தரம் ஆ பிரிவில் வாகன பரிசோதகர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும். (31)

## இராமநாதன் - கலட்டிச்சந்தி வீதியை திருத்தக் கோரிக்கை

திருநெல்வேலி, இராமநாதன் வீதி - கலட்டிச் சந்திக்கு அண்மையில் வீதியின் சிறு பகுதி மிக மோசமாகப் பழுதடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதியை இடைமறித்து (முன்னர்) இராணுவத்தினர் முகாம் இட்டிருந்தனர். மக்கள் போக்குவரவுக்கு அருகாமையில் உள்ள தனியார் வளவினூடாகப் பாதையமைத்து பயணம் மேற்கொண்டனர்.

மீண்டும் மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்ட வீதி, இன்னும் திருத்தப்படமால் உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் பாவனை கூடிய வீதியாக உள்ளதாலும், பெருமளவு மக்கள் பயணம் மேற்கொள்வதாலும், அந்த வீதியை உடனடியாகத் திருத்தவேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.(63)

## தேசிய வாசிப்பு மாதமாக ஒக்ரோபர் பிரகடனம்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனம் செய்து, அம்மாத காலத்தில் தேசிய ரீதியில் பல்வேறு சிறிய, நடுத்தர, பெரிய அளவிலான செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை தீர்மானித்துள்ளது.

மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதையும், நூலகங்களது ஒவ்வொரு பிரிவிலும் மேம்பாட்டைக் கொண்டுவருவதனையும் குறிக்கோளாகக் கொண்டு இந்தத் தேசிய வாசிப்பு மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த வாசிப்பு மாதத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்கள் யாவும் சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் ஆகியோரிடையே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் வகையில், பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை மட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம், வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுதல், வாசகர் வட்டங்களை உருவாக்கல், வாசகர் தேவை அறிந்து பொருத்தமான செயற்திட்டங்களை முன்னெடுத்தல், கண்காட்சிகள், துண்டுப்பிரசுரங்களை வெளியிடல், நூல்கள் சேகரித்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான முன்னேற்பாடாக யாழ். பொது நூல் நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் நடத்தப்பட்டது. (31)

## மலசலக்கூடக் குழியிலிருந்து தனங்களப்பில் ஆயுதங்கள் மீட்பு!

தென்மராட்சி - தனங்களப்பு பகுதியில் மலசலகூடக்குழி ஒன்றிலிருந்து படையினரால் ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டிருப்பதாக படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

படையினருக்கு அளித்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்றுமுன் தினம் காலை 11 மணியளவில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

ஒரு பலநோக்கு இயந்தரத் துப்பாக்கி, ஒரு 40 மி.மி. கிரனைட் லோஞ்சர், இரண்டு ரி56 ரகத் துப்பாக்கிகள், மற்றும் எல்.எம்.ஜி துப்பாக்கிகளின் உதிரிப்பாகங்கள் போன்ற இராணுவ உபகரணங்களே மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஊழியர் சங்கத்தின் மாதாந்த கூட்டம்

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் தலைவர் ந.கனகலிங்கம் தெரிவித்தார்.

## தென்மராட்சி வலய ஆங்கிலதின விழா

(தென்மராட்சி)

தென்மராட்சி வலய ஆங்கிலதின விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

## போரூட் பிரதிநிதிகள் போதை எதிர்ப்பு ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருட்பாவனையை எதிர்த்து போரூட் நிறுவனப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த போரூட் நிறுவனபிரதிநிதிகளும், தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த போரூட் பிரதிநிதிகளும் இந்தப் போதைப் பொருள் எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

யாழ். நகரை அண்டிய வீதிகள் எங்கும் ஊர்வலமாகச்சென்று போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் தொடர்பாக இவர்கள் பிரசாரங்களை மேற்கொண்டனர்.

## யாழ். பல்கலையில் —

## சிகப்புக் கதவுகள் வங்கமொழித் திரைப்படம்

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை முற்பகல் 10 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் புகழ்பெற்ற நெறியாளர் புத்தாடெப் தாஸ் குப்தர்வின் நெறியாள்கையில் உருவான 'லல் தறஜா' (சிகப்புக்கதவு) என்ற வங்கமொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் இணைவாக 'தேவி வந்தனா' எனும் நாட்டிய நிகழ்ச்சிப் படமும் காண்பிக்கப்படும். இந்த நாட்டிய நிகழ்வு ஒடிசி, கதக், பரதம், மணிப்புரி ஆகிய நடன முறைகளை இணைத்து உருவாக்கப்பட்ட படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் காண்பித்த படம்பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும் ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கொல்லப்பட்டவர்களின் நினைவாக தீவகத்தில் சுவரொட்டிகள்

தீவகப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டுப் பகுதியில் ஆவணிமாதம் 22ஆம் திகதிமுதல் ஒருவார காலமாக பெருமளவான பொதுமக்கள் இராணுவத்தினராலும், தேசவிரோதக் கும்பல்களாலும் படுகொலை செய்யப்பட்டனர்.

வெட்டியும், சுட்டும் மோசமாகக் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பொதுமக்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (113)



யாழ். மாவட்ட வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற வர்த்தகக் கண்காட்சியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் வணிக ஒன்றியத் தலைவர் சொ. வெற்றியரசன் பொதுச் சுடர் ஏற்றுவதை இரண்டாவது மூன்றாவது படத்திலும் கண்காட்சிப் பொருட்களை சிறப்பு விருந்தினர்கள் பார்வையிடுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

## 22 குளங்கள் வவுனியாவில் புனரமைப்பு

(கிளிநொச்சி)

இலங்கையில் புனரமைக்கப்பட்டுவரும் 10 ஆயிரம் குளங்களில், வவுனியா மாவட்டத்தில் 22 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களைப் புனரமைக்கவென 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கமநல திணைக்களத்தினால் எட்டுக் குளங்களும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் ஏழு குளங்களும், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தால் 7 குளங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

## முன்பள்ளி ஆக்கப்பொருட் கண்காட்சி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி - இராமநாதபுரம் பகுதியிலுள்ள இருபத்தொரு முன்பள்ளிகளின் ஆக்கப்பொருட் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ரேணுகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்புரையை இராமநாதபுரம் கிராம சேவையாளர் சி.தண்டாயுதபாணியும், அரசியற்துறை இராம ஜெயமும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து முன்பள்ளிகளுக்கான ஆக்கப்பொருட் கண்காட்சி மண்டபத்தினை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத் தலைவருமான கி.சிவதாசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (09)

# நிழல் யுத்தம் ஒன்றை நடத்தி இலக்கை அடைய அரசு முயற்சி

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான அடிநாதமாக விளங்கியவர் கேணல் ராயூ என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

கேணல் ராயூவின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே, படையினர் தென்னாபிரிக்காவிலிருந்து பெற்ற பவள் கவச வாகனத்தை, தொலை இயக்கிமூலம தகர்த்த பெருமை இந்த மாவீரரையே சாரும்.

நிலக்கண்ணிகளை மீட்கும்போது அது வெடிக்கின்ற தொழில் நுட்பத்தையும், மன்னாரில் மேற்கொண்டவர் கேணல் ராயூ என்று தெரிவித்த கேணல் சூசை - தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கேணல் ராயூவின் ஆரம்பம் முதல் இறுதி வரையான செயற்பாடுகளையும், அதனூடான சாதனைகளையும் நினைவு கூர்ந்தார்.

கடந்த போர்நிறுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை எந்தளவுக்கு பலவீனப்படுத்த முடியுமோ, அந்த நடவடிக்கையைத்தான் அனைவரும் மேற்கொண்டனர் என்றும், சமாதான காலத்தில் நிழல் யுத்தம் ஒன்றை மேற்கொண்டு, அதனூடாக எதனை அடைய முடியுமோ அதனை இலக்கு வைத்தே அரசின் நகர்வு உள்ளது.

பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நேற்றுமுன்தி னம் மாலை ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச் சுடரை குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத்தள பதி கேணல் பானு ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை கணினிப்பிரிவின் சிறப்புப்பொறுப்பாளர் தீபன் ஏற்றிவைக்க, கணினிப் பிரிவின் கொடியை அந்தப் பிரிவின் மகளிர் பொறுப்பாளர் திருமதி ரேனா ஏற்றி வைத்தார்.

கேணல் ராயூவின் திருவுருவப்படத்துக்கு அவரது துணைவியார் கங்கா ஈகச்சுடரை ஏற்றிவைக்க, திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை கேணல் ராயூவின் சகோதரன் பத்மநாதன் அணிவித்தார்.

கணினிப் பிரிவு பொறுப்பாளர் எழில்வண்ணன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

## புனரமைக்கப்பட்ட கிராமம் கையளிப்பு

நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி அக்கராயன் மணியன்குளம், சிவநகர், முறிகொம்பன் ஆகிய மையக் கிராமங்கள் - எதிர்வரும் 30 ஆம் திகதி பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்தப் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் குளங்கள், கிணறுகள், பொதுமண்டபங்கள், வீதிகள் யாவும் புனரமைக்கப்பட்டுள்ளன.

### வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் இல்லை

தற்போதைய கடும் வெயில் காரணமாக வன்னிப் பகுதியிலுள்ள பெரும்பாலான கிணறுகளில் நீர் வற்றியுள்ளதனால், மக்கள் தண்ணீருக்கு மிகுந்த சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மல்லாவி, மாங்குளம், துணுக்காய் மற்றும் நாகபடுவான் போன்ற பகுதிகளிலுள்ள கிணறுகள் நீர் வற்றியுள்ளதனால், அந்தப் பகுதி மக்கள் நீர் பெறுவதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

## இடை விலகிய மாணவருக்கு வவுனியாவில் பயிற்சி கல்லூரி

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும், பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகிய மாணவர்களுக்குமான தொழிற்பயிற்சிக் கல்லூரி ஒன்று வவுனியா கனகராயன் குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கல்லூரியை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் புளியங்குளம் ஆசிரிய வள நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆசிரியர் வள நிலைய இயக்குநர் ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு முறைசாரா கல்விப் பிரிவின் பணிப்பாளர், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (03)



# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் உடன் ஆரம்பிக்க வேண்டும்!

## வவுனியா பொது அமைப்புகள் ஒன்றியம் கோரிக்கை

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை வவுனியா மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கோரியுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை விரைவில் போர் ஒன்று ஏற்பட்டு விடுமோ என்ற ஐயத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

எனவே, நாட்டின் எதிர்கால நலனைக் கருத்திறகொண்டு, அரசு - தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பித்து, தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அலகினை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

சமாதானத் தீர்வினை எட்டுவதன் மூலம், இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களிலும், புலம்பெயர்ந்து சர்வதேச நாடுகளில் வசித்து வரும் மக்கள் - தமது சொந்தப் பகுதிகளில் மீளக்குடியமர வழி செய்யுமாறும் அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (03)

### வறிய மக்களுக்கு கடற்புலிகள் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி- பூநகரி கரமன் கிராய் கிராம அலுவலர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 40 குடும்பங்களுக்கு, கடற்புலிகளால் கிடுகுகள் மற்றும் வீட்டு நிர்மாணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.


கடற்புலிகளின் பூநகரிப் பிரதேச பொறுப்பாளர் அமுதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் இப்பொருட்கள் வழங்கப்பட்டது.

### மீன்பிடி பயிற்சிக் கல்லூரி மன்னாரில் அமைக்கப்படும்

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி பயிற்சிக் கல்லூரி ஒன்றை புதிதாக அமைப்பதற்கான நடவடிக்கையை மீன்பிடி நீரியல் வள அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் மன்னார் பகுதி மீனவர்கள் வெளி மாவட்டங்களில் உள்ள மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரிகளுக்குச் சென்றே பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

மன்னார் மீனவக் கூட்டுறவு சமாசங்களின் வேண்டுகோளினையடுத்து, மன்னார் மீன்பிடித் திணைக்களம் இந்தக் கல்லூரியை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.



அண்மையில் ஆனையிறவு உப்பளத்துக்கு விஜயம் செய்திருந்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் - உப்பு உற்பத்தி நிறுவன ஆலோசகர் செ.வேலாயுதபிள்ளையுடன் உரையாடுவதையும், உப்பு நிறுவன தொழிலாளர்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் படங்களில் காணலாம்.

### வவுனியா மாவட்டத்தில்

## காப்புறுதி செய்த 21 விவசாயிகளுக்கு பயிரழிவு நட்டஈடு வழங்கப்பட்டது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பயிர் காப்புறுதி திட்டத்தின் கீழ், பம்பைமடு கமநல கேந்திர பிரதேசத்துக்கு உட்பட்ட கமக்காரர், பயிர் காப்புறுதி செய்த 21 கமக்காரர்களுக்கு பயிர் அழிவுக்கான நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி அப்பகுதி கமநல சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே.தெய்வேந்திரம் தலைமையில் காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காப்புறுதியை செய்த 21 கமக்காரர்களுக்கும் காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர் காசோலைகளை வழங்கினார்.

மேலும் நெற்பயிர்ச் செய்கையை செய்பவர்களின் பயிர்களுக்கான காப்புறுதியை செய்தல், பயிரழிவு ஏற்படும்போது அதற்கான காப்புறுதி தொகையைப் பெறலாம் என்று விபரங்கள்- எங்களால் அறிவிக்கப்பட்டும், கமக்காரர்கள் இந்த காப்புறுதியை செய்வதற்கு ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். இதனால், விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேணடும்.

ஒரு ஏக்கருக்கு 300 ரூபா வீதம் காப்புறுதி செய்வதன் மூலம் பயிரழிவு ஏற்பட்டால் ஏக்கருக்கு 6000 ரூபா வரையில் அழிவுக்கான பணததை இந்த காப்புறுதி மூலம் பெற்றுக்கொள்ளலாம் என பயிர் காப்புறுதியின் உதவிப் பணிப்பாளர் ஜே.ஏ. விக்ரமசேகரன் தெரிவித்தார்.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிக்கு கிளிநொச்சியில் சமூகநலன் பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன், கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து - சமூக நலப் பயிற்சி நெறித்திட்டம் பாடசாலை ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வருடம் ஆனி மாதம் நடுப்பகுதியில் இந்தப் பயிற்சி நெறியின் முதற்கட்டமாக 27 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு - ஒவ்வொரு பாடசாலையிலும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் 50 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு மூன்று நாட்கள் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியின் 2 ஆம் கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கான இந்தப் பயிற்சித் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒவ்வொரு பாடசாலையிலும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, இருநாடகள் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினராலும், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளாலும் தொடர்ச்சியாக யூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இரண்டாம் கட்டப்பயிற்சி நெறியில் இதுவரை 12 பாடசாலைகளில் பயிற்சி நெறிகள் நிறைவு பெற்றது. இந்தப் பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகளும் வழங்கப்பட்டு, ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் முதலுதவிக் கைநூல்களும், சென்.ஜோன்ஸ் அன்புலன்ஸ் படைப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி நெறிகள் - ஐப்பசி மாதம் நிறைவடைவதுடன்,

பயிற்சி நிறைவு நாளில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் தேர்வுகள் நடாத்தப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கிறது.

அத்துடன், இந்தத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விரிவுபடுத்தப்படும் என்றும், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் கிளிநொச்சி படைப்பிரிவின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சிற்றினம் அஞ்சும் பெருமை சிமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்*

திருக்குறள்

## நமது நோக்கு

### அரசின் நிலையும்; அமைச்சரின் குரலும்

நாட்டில் பரவலாக நடைபெறும் கொலைகளும், வன்முறைகளும் அரசாங்கத்தின் பொறுமையைச் சோதிப்பதாகவும்- சமாதானத்தின் மீதான விருப்பாலும் அதனை தொடர்வதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காகவும் தான் தாங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

அண்மையில் பரவலாக நடைபெற்றுள்ள கொலைகளுக்கும் தமக்கும்- அதாவது அரசுக்கும் படைத்தரப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் கூறியுள்ள அமைச்சர், அதற்கான பொறுப்பினை விடுதலைப்புலிகள் மீது சுமத்தும் பாணியில் தெரிவித்துள்ள இக்கருத்துக்கள் நாட்டில் தற்போது சமாதான முன்னெடுப்பை கேள்விக் குறியாக்கும் வகையில் நிகழ்ந்துவரும் சம்பவங்களின் பின்னாலுள்ள அரசினதும், படைத்தரப்பினதும் செயற்பாட்டு மூலோபாயங்களை மறைத்து ஒழித்துவிடும் நோக்கத்தையே கொண்டவை என்பது வெளிப்படையான விடயமாகும்.

ஆரம்பகாலம் முதலே சமாதான முன்னெடுப்புக்களையும், அதற்கான நோர்வேத் தரப்பு அனுசரணையையும் மிகவும் தீவிரமாக எதிர்த்தும், நிராகரித்து ஒதுக்கியும் வந்த இன்றைய ஜனாதிபதியும் அவரின் தலைமையின் கீழான இன்றைய அரசும் இப்போது மீண்டும் நோர்வேயை சமாதானத்துக்கு அனுசரணையாளராகப் பணிபுரிய அழைத்த போதே சமாதானத்தின் பேரிலான இவர்களின் அந்தரங்க சுத்தியைச் சந்தேகிக்க வேண்டிய அவசியம் ஏற்படவே செய்தது.

புதிய அரசு சமாதானத்தை முன்னெடுக்க நோர்வேயை அழைத்ததற்கு ஒரு அரசியல் உள்நோக்கம் இருக்கவே செய்தது. அந்த உள்நோக்கமானது இப்போது மெல்ல மெல்ல வெளிப்படவும் தொடங்கியுள்ளது. ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் வழிநடத்தலில் கருணாவின் ஆட்களையும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களையும் பயன்படுத்தி மேற்கொண்டுவரும் அதே நேரம், நோர்வே அரசுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் எதிராக கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றமையை தற்போதைய அரசின் நடவடிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

முதலில் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் சமரவீர குறிப்பிட்ட அறிவிப்பு விடுதலைப்புலிகளை சீண்டும்- மற்றும் எச்சரிக்கும் பாணியில் அமைந்திருக்கிறது என்றால் அதே மாநாட்டில் நோர்வே அரசும்- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் விடுதலைப்புலிகளுக்குப் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக அரசுக்கு சந்தேகம் எழுந்துள்ளதாகவும் கூறியுள்ளமையானது நோர்வேக்கு சலிப்பையும் விரக்தியையும் ஊட்டும் வகையிலேயே அமைந்துள்ளது எனலாம்.

அமைச்சரவைப் பேச்சாளர், ஒரே மாநாட்டில் விடுதலைப்புலிகளையும், நோர்வே அரசு மற்றும் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரையும் குற்றஞ் சாட்ட முனைந்துள்ளமையானது, சமாதானம் தொடர்பான அரசின் உண்மையான நிலைப்பாடு குறித்து தெட்டத்தெளிவாக விளக்குவதாகவே உள்ளது.

இதே அமைச்சர்தான் சில மாதங்களின் முன்னர் இராணுவத்தரப்பு, கருணாவுக்கும் அவரது குழுவினர்க்கும் பாதுகாப்பு அளித்ததை ஒப்புக்கொண்டு அறிக்கைவிட்ட பிரகிருதியுமாவார். இன்று கிழக்கிலும் ஏனைய சில தென்பகுதி இடங்களிலும் இதே குழுவைச் சேர்ந்தவர்கள்தான் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கின்றனர் என்பதை கொட்டாவ சம்பவம் உட்பட பல நிருபித்துள்ள வேளையில் நடந்த கொலைகள், வன்செயல்கள் ஆகியவற்றின் சூத்திரதாரிகள் யாரென தெட்டத்தெளிவாக நிருபிக்க முடியாத நிலையில்- கொலையைப் புரிந்தவர்கள் யாரென இன்னமும் கண்டுபிடித்து கைதுசெய்ய முடியாத அரசு அதற்கு விடுதலைப்புலிகளை காரணம் காட்ட முயல்வது அபத்தமான விடயமே ஆகும். அதுமட்டுமல்ல படைத்தரப்பினரின் எத்தனையோ போர் நிறுத்த உடன்பாட்டு மீறல் நடவடிக்கைகளை கடந்த மூன்றாண்டு காலமாக பொறுமையோடு சகித்து வந்த விடுதலைப் புலிகளைச் சீண்டி அவர்களை போருக்கு இழுக்கும் விடயமுமாகும்.

அதே போன்று நோர்வே அரசு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியோர் மீது தமக்கு சந்தேகம் எழுந்துள்ளதாக அரசின் சார்பில் அமைச்சர் சமரவீர குற்றம் சாட்டுவது இதுவே முதல் தடவையல்ல... முன்னர் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்திலும், இன்றைய ஐ.ம.சு முன்னணியைச் சேர்ந்த கூட்டுக்கட்சிகளும்- இதே அமைச்சரும் நோர்வே மீது எழுப்பிய சந்தேகங்களும் கண்டனங்களும் ஏராளம்.

அமைச்சர் சமரவீரவின் அறிக்கை கூறும் கருத்து நிலைப்பாடு இதுதான், அதாவது அரசாங்கம் சமாதானத்தை முன்னெடுக்கும் நிலையில் உடனடியாக எதனையும் செய்யப் போவதில்லை.

நேர்வேயை எப்படியாவது அனுசரணையாளர்கள் பதவியிலிருந்து தாமதமாக விலகிப்போகும் நிலைக்கு வெறுப்பும், சலிப்புமூட்ட வைப்பதுடன் விடுதலைப்புலிகளுக்கு சினமூட்டி அவர்களைப் போர்க்கோலம் கொள்ளவைப்பதுதான் அரசின் இன்றைய மூலோபாய உத்தி என்பதையே அமைச்சர் சமரவீரவின் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

அரசு தரப்பிலிருந்துவரும் சமாதானம் தொடர்பான சமிக்ஞைகள் யாவும் மீண்டும் அது மற்றொரு 'சமாதானத்திற்கான யுத்தத்திற்கு' தயாராகிக் கொண்டிருப்பதையே உணர்த்துகின்றன.

## நாடும் நடப்பும்




# விடுதலைப் புலிகள் பேச்சு நடாத்த உத்தியோகபூர்வமாக அழைக்கவில்லை

## ஜே.வி.பியின் முக்கியஸ்தர் தெரிவிப்பு

அரசாங்கத்தின் பங்காளிகளான மக்கள் விடுதலை முன்னணியினருடன் பேச்சு நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள நிலையில் இந்தப் பேச்சு முயற்சியை ஜே.வி.பி. நிராகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மக்கள் விடுதலை முன்னணியினருடன் தாம் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக கூறியிருந்தார்.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட ஜே.வி.பி. முக்கியஸ்தர் ஒருவர் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்று கூறியுள்ளார்.

இருந்தபோதிலும், இது குறித்து உத்தியோகபூர்வமான தீர்மானம் எதனையும் ஜே.வி.பி. எடுக்கவில்லை என்றும் தமக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து அழைப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றும் கூறிய அவர், விடுதலைப் புலிகள் தமக்கு அழைப்பினை அனுப்பும் பட்சத்தில் அது குறித்து தாம் உத்தியோகபூர்வமான தமது முடிவினை அறிவிப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

# வெளிவாரி முதற் கலைத் தேர்வு பரீட்சை யாழ். பல்கலையில் நடைபெற்று வருகிறது

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைத் திணைக்களத்தின் முதற்கலைத் தேர்வுப் பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழக பரீட்சை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 26ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வரும் பரீட்சைகள் அரசாங்க அலுவலகங்களில் பணிபுரிபவர்களின் நன்மை கருதி அடுத்து நடைபெறவுள்ள பரீட்சைகள் சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரமே இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களது நன்மை கருதி பரீட்சை நாட்கள் தரப்பட்டுள்ளன. அதன்படி நாளை மெய்யியலும், நாளை மறுதினம் வரலாறும், அதன்பின்பு 4ஆம் திகதி புவியியலும், 11ஆம் திகதி தமிழும், 19ஆம் திகதி இந்து நாகாிகமும் இடம்பெறும்.

தொடர்ந்து வருகின்ற பரீட்சைகளில் இந்து நாகரிகத்தில் 135 மாணவர்களும், தமிழ்ப் பாடத்தில் 120 மாணவர்களும், மெய்யியலில் 85 மாணவர்களும் தோற்றவுள்ளதா்கவும் தெரிவித்துள்ளதோடு, சென்ற காலங்களைப் போலல்லாமல் இந்த வருடம் இந்தப் பரீட்சையில் எதிர்பார்த்ததைவிட குறைவான மாணவர்களே கலந்து கொண்டுள்ளதாகப் பேராதனைப் பல்கலைக்கழக பொருளியற்துறை முதுநிலை விரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

# கிறிஸ்தவ கல்வி மன்றத்தின் ஏற்பாட்டால் நல்லூரில் ஓய்வுநாள் பயிற்சிப் பட்டறை

(நல்லூர்)

கொழும்பு மறை மாவட்ட கிறிஸ்தவக் கல்விமன்ற அங்கத்தவர்களால் நடத்தப்படுகின்ற விடுமுறைக்கால ஓய்வுநாள் பாடசாலை பயிற்சிப் பட்டறை நிகழ்வு நல்லூர் பிரதேசத்தில் நடைபெற்றுவருகின்றது.

நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தில் சென்ற புதன் கிழமை தொடக்கம் நடந்துவருகின்ற இந்த நிகழ்வானது நாளை வரை இடம்பெறவுள்ளது.

நான்கு வயதுக்கும் பதினாறு வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கான இந்தப் பயிற்சிப் பட்டறையில் இந்து கிறிஸ்தவ மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

சமய விழுமியங்களை எவ்வாறு பேணிப்பாதுகாப்பது தொடர்பான விடயங்களை இயல் இசை நாடகங்களின் மூலம் இளம் சிறார்களின் இயல்புகளுக்கு ஏற்ப சிறப்பாக கற்பித்துவரும் இந்தப் பயிற்சிப்பட்டறையை பங்குத்தந்தை வண அருளம்பலம் ஸ்ரீபன், வணக்கத்துக்குரிய தோமஸ் ஜோக் இணைந்து நடத்திவருகின்றனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையானது இப்பாடசாலை விடுமுறை காலங்களில் இலங்கையின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

# நீதியான அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்

## - கூட்டமைப்பு எம்.பி. ஈழவேந்தன்

(கொழும்பு)

சமாதானம் குறித்த நிலைப்பாட்டில் விடுதலைப்புலிகளின் பொறுமையை அரசாங்கம் சோதிக்கக் கூடாது என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலிகள் அரசாங்கத்தின் பொறுமையை சோதிக்கக் கூடாது என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடற்படையினர் மத்தியில் உரையாற்றியமை பொறுப்பற்ற செயல். தமிழர்கள் இறப்பிலும் மகிழ்ச்சியடைபவர்கள்.

இறப்பிற்கு அஞ்சமாட்டார்கள். மீண்டும் ஒரு போர் ஆரம்பித்தால் அதனை எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றார்கள். ஆனால், சமாதானம் ஏற்படவேண்டும். நீதியான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அரசாங்கம் யுத்தம் ஆரம்பிக்கப்படுவதையே விரும்புகின்றது. பதில் பாதுகாப்பு அமைச்சரின் உரை அதனையே எடுத்துக்காட்டுகின்றது.

ஜனாதிபதி நாட்டில் இல்லாத வேளை, பதில் பாதுகாப்பு அமைச்சர் யுத்தம் என்றால் யுத்தம் என்ற தொனியில் பேசியிருப்பது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. உண்மையில் அரசாங்கம் தான் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதை இழுத்தடிக்கின்றது. அது மாத்திரமல்ல விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதும், இராணுவம் தாக்குதல் நடத்துகின்றது. ஆனாலும் புலிகள் மிகவும் பொறுமையாகவே இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் பொறுமையை புலிகள் சோதிக்கக் கூடாது என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் எவ்வாறு கூற முடியும்? ஆகவேதான், அமைச்சர் பொறுப்புடன் செயற்படவேண்டும். யுத்தத்தை தூண்டுகின்ற இனவாத கருத்துக்களை வெளியிடக்கூடாது என்றார்.

## இந்தியர்களை கடத்திவைத்துள்ள

# இஸ்லாமிய குழுவின் கோரிக்கையில் திடீர் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது!

ஈராக்கில் உள்ள குவைத் நிறுவனத்தில் சாரதிகளாகப் பணியாற்றிவந்த திலக்ராஜ், அந்தர்யாமி, சுக்தேவ்சிங் ஆகிய 3 இந்தியர்கள் மற்றும் 3 கென்ய நாட்டவர்கள் உட்பட 7 பேரைத் தீவிரவாதிகள் கடந்த மாதம 21 ஆம் திகதி கடத்திச் சென்றனர்.

அவர்களை விடுதலை செய்ய வேண்டுமானால், அமெரிக்கப் படையினர் அனைவரும் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டும். கோடிக் கணக்கில் நட்டஈடு வேண்டும். குவைத் நிறுவனம் வெளியேற வேண்டும் என்று பல்வேறு நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், அந்தப் பணயக்கைதிகளின் தலையைத்துண்டித்துக் கொலைசெய்வோம் என்றும் மிரட்டல் விடுத்திருந்தனர். அவர்களை மீட்கக் குவைத் நிறுவனம் தீவிரவாதிகளின் பிரதிநிதி ஷேக் அல் துமைமியுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால் பணயக் கைதிகளை விடுவிப்பதில் சிக்கல் நீடித்தது.

இந்த நிலையில் இப்போது தீவிரவாதிகள் தங்கள் நிபந்தனைகளைத் தளர்த்தியுள்ளனர். மற்றக் கோரிக்கைகள் அனைத்தையும் கைவிட்டு குவைத் நிறுவனம் வெளியேறிவிட வேண்டும் என்பதை மட்டும் தீவிரவாதிகள் வற்புறுத்தியுள்ளனர். இந்த நிபந்தனைக்கு குவைத்தின் கே.ஜி.எல் நிறுவனம் ஒப்புக்கொண்டது.



இப்போது எற்பட்டுள்ள புதிய திருப்பம் காரணமாக 3 இந்தியர்கள் உட்பட 7 பேரும் விரைவில் விடுதலையாவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

அந்த 7 பேரும் நலமாக இருப்பதாகவும் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். 7 பணயக்கைதிகளும் வரிசையாக அமர்ந்திருப்பது போன்ற வீடியோக் காட்சியையும் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.




## ஈராக்கில் கடத்தப்பட்ட

## இத்தாலிய பத்திரிகையாளர் படுகொலை செய்யப்பட்டார்!



ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்ட இத்தாலியப் பத்திரிகையாளரும், செஞ்சிலுவைச் சங்க உதவிப் பணியாளருமான என்சோ பல்தோனி இஸ்லாமிய ஆயுதக்குழுவினரால் நேற்று படுகொலை செய்யப்பட்டார்.

கடந்த ஒகஸ்ட் 19 ஆம் திகதி பாக்தாத்தில் இவரைக் கடத்திய இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகள், ஈராக்கிலுள்ள இத்தாலியப் படையினர் அங்கிருந்து வெளியேறவேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தனர். இவர்களின் இந்தக் கோரிக்கையை இத்தாலிய அரசாங்கம் ஏற்க மறுத்ததால் அவர் கொல்லப்பட்டர்.

இந்தக் கொலையை இஸ்ரேல் பிரதமர் சில்வியோ பேலுஸ்கோணி கண்டித்ததுடன், இது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல் எனவும் தெரிவித்தார்.

ஈராக்கின் இடைக்கால அரசு கேட்டுக்கொண்டால் மட்டுமே இத்தாலியப் பண்டயினர் அங்கிருந்து வெளியேறுவர் என இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் பிராங்கோ பிறாற்றின்னி நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

நேற்று இடம்பெற்ற கொலை தொடர்பாகவும், ஈராக் தொடர்பாக இத்தாலியின் நிலைப்பாடு குறித்தும் இத்தாலிய நாடாளுமன்றில் வெளியுறவு அமைச்சர் விளக்கமொன்றினை அளிகவுள்ளார்.

கொல்லப்பட்ட பத்திரிகையாளரான பல்தோனியின் சடலம் இவர் காணாமற்போன நஜாவ் நகரத்திற்கருகில் ஈராக்கியச் சாரதியொருவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பல்தோனியை கிளிர்ச்சிவாதிகள் தமக்கு முன்னிருத்தி - அல்ஜசீரா தொலைக்காட்சியில காண்பித்தனர். இதன்போது பல்தோனி உரையாற்றியபோதும், அவரது உரையின் ஒலி வெளிவரவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்தோனி கொல்லப்படுவது வீடியோ நாடாவில் காட்டப்பட்டபோது - இத்தாலிய இராஜதந்திரிகள் பார்வையிட்டதாகவும், அவ்வேளை அவர் கிளர்ச்சிவாதிகளுடன் தப்புவதற்காகப் போராடியதாகவும் இத்தாலிய வெளியுறவு அமைச்சு தெரிவித்தது. பல்தோனி கொல்லப்பட்டதற்கு ஈராக்கின் இஸ்லாமிய இராணுவம் என்ற அமைப்பு உரிமைகோரியுள்ளது.


வர்த்தகக் கண்காட்சி

அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திப் பொருட்களை வாங்கி இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அன்னை

அண்ணா தொழிலகம்

நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். இணுவில்.

(3010)

"அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்"

மத்திய கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாபெரும் வர்த்தக் கண்காட்சியில் வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகாரம்பெற்ற விற்பனை முகவர் குறிஞ்சி றேடேர் நிறுவனத்தால் காட்சிப்படுத்தி விற்பனைசெய்துகொண்டிருக்கும் BAJAJ மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 1000 (ஆயிரம்) விலைக்கழிவுடன் 2 கெல்மட்டுகளும் 1 ஜக்கட்டும் இலவசமாக 27, 28, 29.8.2004 திகதி மட்டுமே வழங்கப்படும்.

"உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கி எனது தேசத்தை வளப்படுத்துவோம்"

- தரமான உள்ளூர் தளபாட உற்பத்திகள்
- 7 % விலைக்கழிவுடன் கூடிய விற்பனை
- யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும். தளபாடங்களைக் கொள்வனவு செய்யவும் இன்றே நாடுங்கள்

Equip Unit Trust
E.U.T

தலைமை அலுவலகம்.
கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
T.P.0777168128
071373387

E.U.T
நிறுவனத்தினர்.

காட்சியறை
கே.கே.எஸ்.றோட்,
சுன்னாகம்.

(சி-3012)

M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான

முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

இல.777, கே.கே.எஸ். வீதியில் மீண்டும்
தங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

ஆட்டா மா, வறுத்த சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, உழுந்து மா, கோதுமை குறுணல்

ரோஸ் ரசம், நண்ணாரி ரசம், நெல்லி ரசம், கிரேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம்

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய்

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட்.

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் படு ஊறுகாய், மோர் மிளகாய்

வெள்ளைப் பிட்டுக் கலவை, சிவப்புப் பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை

சீயாக்காய் பவுடர்

பிளிச்சிங் பவுடர்

ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

M.G.M. T.P :- 0777 741195
0777 741295

(C/2961)




யாழ்ப்பாண வணிகர் கழகம் நடாத்தும்

INDUSTRIAL TRADE FAIR & EXHIBITION JAFFNA 2004

27 ஆம் திகதிமுதல் 29 ஆம் திகதிவரை Jaffna Central College இல் நடைபெறும் இந்நிகழ்வில International நிறுவனமும் பங்குகொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதிதாக ஊர்தி பராமரிப்பு நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க ஆர்வம் உள்ளவர்களுக்கு இது அரியதோர் சந்தர்ப்பம்

Auto Mobile Test & Maintenance Equipments Tool and Accessories இறக்குமதியாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும் Mytools Ineternational (Pvt) Ltd. இன் சேவையைப் பெற உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்பு

திரு.T.K.M.Faiz
Director/Sales Engineer
0777-396711

திரு.S.Razeen
mkt mgr - 0714098011

திரு.S.H.Sirajudeen
Director - 0777-414711

யாழ்.மாவட்டத்திற்கும், வன்னி மாவட்டத்திற்கும் விநியோகத்தர்கள் தேவை

யாழ்.மத்திய கல்லூரி வர்த்தகக் கண்காட்சியில் Mytools கண்காட்சி மைதானத்தில் அல்லது கொழும்பு காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

HEAD Office
MYTOOLS INTERNACIAL (PVT) LTD
263, Sri Saddharma Mawatha Colombo - 10
Tel: 011 - 2691896, 2679176 - 77

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விடுதலைப் புலிகளுக்கு நோர்வே ராணுவப் பயிற்சி வழங்கவில்லை!

## அந்த நாட்டுத் தூதரகம் முற்றாக நிராகரிப்பு

(ஒஸ்லோ)

விடுதலைப் புலிகளுக்கோ அல்லது வேறு ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கோ நோர்வே அரசாங்கம் ஒருபோதும் இராணுவப் பயிற்சியை அளிக்கவில்லை என்று கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் - கடந்த வாரம் ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கு தொடர்பாக பிழையான செய்திகளை உடகங்கள் வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி நோர்வேயில் உள்ள ரேனா இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தமை ஸ்கண்டிநேவிய நாடுகளில் அவர்கள் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் ஒரு அங்கமாகவே இருந்தது.

இவர்களின் சுற்றுப் பயணம் ஜனநாயக ஆட்சி முறைகளின் அம்சங்கள் பற்றியும் மற்றும் ஆண் பெண் சமத்துவம், ஜனநாயக நாடு ஒன்றில் இராணுவக் கட்டுப்பாட்டு முறை என்பன பற்றியும் அறிந்துகொள்வதாக அமைந்திருந்தது.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் அளித்த உறுதிமொழிக்கமைய இந்தச் சுற்றுப் பயணம் இடம்பெற்றது.

அப்பொழுது விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்ததைகளில் இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை ஆராயும் வகையில், அரசியல் விவகாரங்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் இந்தச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள ரேனா இராணுவ முகாம் விஜயம் நான்கு மணித்தியாலங்களுக்கு நீடித்தது. அங்கு இடம்பெற்ற சொற்பொழிவில் நோர்வேத் துருப்புக்கள் அமைதி காக்கும் பணியிலும் மற்றும் சர்வதேச அமைதிகாக்கும் பணிக்கு எவ்வாறு தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள் என்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

அப்பொழுது ரேனா முகாம் விஜயம் பற்றி பத்திரிகையில் விரிவான செய்திகள் வெளியிடப்பட்டன என்றும் நோர்வே தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# விசேட அதிரடிப்படைக்கு 2000 பேர் ஆட்சேர்ப்பு!

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையைப் பலப்படுத்தும் நோக்கில் - இரண்டாயிரம் பேரை ஆட்சேர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நடவடிக்கைப் பிரதேசங்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஆளணிப் பலத்தை அதிகரிக்கும் நோக்குடனேயே இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவிருப்பதாக, விசேட அதிரடிப்படைப் பிரிவுக் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே தெரிவித்தார்.

இரண்டாயிரம் புதிய படையினரைச் சேர்த்துக்கொள்ளும் அரசாங்கத்தின் இந்தத் திட்டம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வர்ரம் வெளியிடப்படவுள்ளது.

# புலிகளின் இடைக்கால யோசனையை ஜே.வி.பி. நிராகரித்தது துரதிஷ்டமே!

## முஸ்லிம் காங்கிரஸ் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனையை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. நிராகரித்திருப்பது துரதிஷ்டவசமானது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்படாமை காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியடைந்துள்ள போதிலும், முஸ்லிம்களின் விவகாரம் குறித்துப் பேசித் தீர்வுகாணலாம் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதால் அது தொடர்பாகப் பேசத் தயாராகவே இருக்கிறோம்.

தடைப்பட்டுள்ள சமாதானப்பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவேண்டியது அவசியமாகும். அனைத்துத் தரப்பினரும் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம் உறுதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேசமயம், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அரசியல் அதியுயர் பீட கூட்டத்தின்போது அனைத்துக் கட்சிகளுடனும் சமாதானப் பேச்சு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனை குறித்து தொடர் பேச்சுக்களை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார். (01)

### நோர்வே...

விடுதலைப் புலிகள் மீதான அமெரிக்காவின் கடும் போக்கைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு - நோர்வே தரப்பு மிலிந்த மொறகொடவிடம் கோரியதாகவும் இணையத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (01)

### கனடிய...

சுக்கள் மூலம் மட்டுமே இப்பிரச்சினையை விரைவாகத் தீர்க்கமுடியும் என்பதை மையப்படுத்தியே பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற இத்தகைய சந்திப்பின் அடுத்த கட்டமாகவே இந்தச் சந்திப்பு கருதப்பட்டதாகவும், இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் சர்வதேச நாடுகளின் கருத்தும் விளக்கமும் என்ன என்பதைத் தெளிவாக்குவதே இவர்களது முதன்மையான நோக்கமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதற்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன் -

புலிகள் தரப்பு மிக நேர்மையுடனும் தெளிவுடனும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளை முதலில் கவனத்தில் எடுப்பதற்காக மட்டுமே இடைக்கால நிர்வாகசபை குறித்த திட்டமொன்றை ரணில் அரசிடம் கையளித்தது.

இருப்பினும் ரணில் அரசு, இடைக்கால தன்னாட்சி நிர்வாக அலகை ஆராய்வதற்கு முன்னதாகவே, சந்திரிகா பல அரசியல் குழப்பநிலையைத் தோற்றுவித்ததாலும் அதற்குப் பின்னர் உருவான அரசியல் மாற்றங்களாலும் தற்போது தெற்கில் எமது இடைக்காலத் தீர்வு யோசனை குறித்து தவறான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் ஆர்வத்துடனேயே இருக்கின்றனர். அரசாங்கம் - சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோர்வே பிரதிநிதிகளுக்கு ஒரே குரலில் தங்களது விருப்பத்தைத் தெரிவித்து அவர்களை மீண்டும் சமரச முயற்சிகளை மேற்கொள்ளப் பணிக்க வேண்டுமென்பதே தங்கள் விருப்பம் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி அமைப்பு முறையே சிறந்ததென்றும், இனநெருக்கடிக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகள் ஆர்வமாக இருப்பதாகவும் பொப்ரே பின்னர் கருத்துத் தெரிவித்தார்.

# அமைதிச் சூழல் நீடிக்குமென எந்த உறுதிப்பாடும் இல்லை!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவும் அமைதிச் சூழ்நிலை எவ்வளவு காலம் நீடிக்குமென்று உறுதியாகக் கூற முடியாதிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் ஒரு தரப்பினர் ஒருவகை நிலைப்பாட்டை முன்வைக்க இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டை மற்றைய தரப்பு முன்வைக்கிறது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சை ஆரம்பிக்கத் தயார் என்று அரசாங்கத்தின் ஒரு தரப்புத் தெரிவித்துள்ளது.

ஆனால், விடுதலைப் புலிகளின் இடைக்கால யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடுவோம் என்று மற்றைய தரப்புக் கூறியுள்ளது. இது பரஸ்பர முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.




## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 28 | 32 | 25 | 85 |
| சீனா | 25 | 17 | 13 | 55 |
| அவுஸ்ரேலியா | 16 | 11 | 16 | 43 |
| ரஷ்யா | 15 | 21 | 25 | 61 |
| ஜப்பான் | 15 | 09 | 10 | 34 |
| ஜேர்மனி | 12 | 13 | 18 | 43 |
| பிரான்ஸ் | 10 | 07 | 10 | 27 |
| இத்தாலி | 09 | 07 | 08 | 24 |
| தென்கொரியா | 08 | 10 | 07 | 25 |
| ருமேனியா | 08 | 05 | 05 | 18 |
| உக்ரெய்ன் | 08 | 04 | 07 | 19 |
| பிரிட்டன் | 07 | 08 | 11 | 26 |
| ஹங்கேரி | 06 | 07 | 03 | 16 |
| கிறீஸ் | 06 | 04 | 03 | 13 |
| நெதர்லாந்து | 04 | 08 | 08 | 20 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| நோர்வே | 04 | 00 | 01 | 05 |
| ஸ்பெயின் | 03 | 09 | 05 | 17 |
| போலந்து | 03 | 02 | 04 | 09 |
| நியூஸிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| துருக்கி | 03 | 01 | 02 | 06 |
| கனடா | 02 | 05 | 02 | 09 |
| கியூபா | 02 | 04 | 07 | 13 |
| பெலாரஸ்ட் | 02 | 03 | 07 | 12 |
| பிறேசில் | 02 | 02 | 02 | 06 |
| ஸ்லோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| பல்கேரியா | 02 | 01 | 08 | 11 |
| எதியோப்பியா | 02 | 01 | 01 | 04 |
| தாய்லாந்து | 02 | 00 | 04 | 06 |
| சிலி | 02 | 00 | 01 | 03 |
| ஈரான் | 02 | 00 | 00 | 02 |
| ஒஸ்ரியா | 01 | 04 | 01 | 06 |
| கென்யா | 01 | 04 | 01 | 06 |
| செக் குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| லிதுவேனியா | 01 | 02 | 00 | 03 |
| சுவிஸ்லன்ட் | 01 | 01 | 03 | 05 |
| இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| தென்னாபிரிக்கா | 01 | 01 | 02 | 04 |
| ஜமேக்கா | 01 | 01 | 01 | 03 |
| சிம்பாப்வே | 01 | 01 | 01 | 03 |
| மொறோக்கோ | 01 | 01 | 00 | 02 |
| டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |


## கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு அருள்மிகு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் (காளிகோயில்)

### தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

28.08.2004 இன்று சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு வசந்த மண்டப்பூசை இடம்பெற்று 8.30 மணியளவில் விநாயகப்பெருமானும், காளி அம்பாளும் தேரில் எழுந்தருளி வீதியுலாவரும் காட்சி இடம்பெறும்.


29.08.2004 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து தீர்த்தோற்சவம் இடம்பெறும் என்பதை அடியவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மகோற்சவ பிரதமகுரு -
பிரம்மஸ்ரீ மு.இரத்தினசாமிக்குருக்கள்
*(பாப்பாக் குருக்கள்)*
(மல்லாகம் பழம்பிள்ளையார் தேவஸ்தானம்)

இங்ஙனம்,
ஆலய பரிபாலனசபை.

(915)


## மரண அறிவித்தல்



### சர்வானந்தம் ஜெயானந்தம் ரஜீவ் (ராயு)

(உரிமையாளர், இளந்தென்றல் - பண்டத்தரிப்பு)

சந்தைவீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சர்வானந்தம் ஜெயானந்தரஜீவ் 27.08.2004 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சர்வானந்தம் ஜெயமலர் தம்பதிகளின் அன்பு மகனும், கறோலிஸ் மனுவல், காலஞ்சென்ற மனுவல் செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற றீற்றா இந்திராணி, பரஞ்சோதி- புஸ்பராணி, வினிபிரட் - காந்திமதிதேவ ஆகியோரின் பெறாமகனும், தேவதாஸ் - செல்வராணி, ஜேக்கப், ஞானதாஸ் - யசிந்தா, மரியதாஸ் - ஈஸ் வரிதேவி, ஜீவதாஸ் - மேரி ஆகியோரின் மருமகனும், ஷெறமி, ஜொய்சன் ஆகியோாின் சகோதரனும், செல்வகுமார், கௌசிகன், நிசாகன், ரெறன்ஸ், கிளோறி, றோய், தர்சினி, றெயினி, உமைநேசன், ஜரா, சௌமியன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.08.2004 பிற்பகல் நடைபெறும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.*

தகவல்:
அழகுநிலா - *இளவாலை*
அருளம்பலம் *(காங்கேசன்துறை)*

(சி-3013)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.